[redacted]

முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 23 - அரசியல் விஞ்ஞானம்

## புள்ளியிடும் திட்டம்

[redacted]

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்பட வுள்ளன

CS CamScanner

**வினாப்பத்திரம் I**

A மற்றும் B ஆகிய இரு பகுதிகளைக் கொண்டது.

நேரம்: 02 மணித்தியாலங்கள்

**வினாப்பத்திரம் I இன் A பகுதி**

தெரிவு 05 இனைக் கொண்ட பல்தேர்வு வினாக்கள் 30 ஆகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகளாகும்.

**வினாப்பத்திரம் I இன் B பகுதி**

குறுவிடை வழங்கத்தக்க 20 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகளாகும்.

- **வினாப்பத்திரம் I இன் A பகுதியினதும் B பகுதியினதும் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.**

**வினாப்பத்திரம் II**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இது **I, II, III** என மூன்று பகுதிகளைக் கொண்டது.

பகுதி I இல் இருந்து குறைந்தது ஒரு வினாவினையும், II இல் இருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களையும், பகுதி III இல் இருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் உள்ளடக்கி 05 வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

பகுதி I - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்.

பகுதி II - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 04 காணப்படும்.

பகுதி III - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்

வினாப்பத்திரம் **II** இற்கான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**இறுதிப் புள்ளிகளைக் கணித்தல்**

வினாப்பத்திரம் I = 100

வினாப்பத்திரம் II = 100

இறுதிப் புள்ளிகள் $= \frac{200}{2} = 100$



CS CamScanner

## பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் :

இப் புள்ளியிடும் திட்டத்திலுள் க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024) நடைபெற்ற பரீட்சைக்கான இல. 23 அரசியல் விஞ்ஞானப்பாடத்திற்கு அமைவாக முதலாம் மற்றும் இரண்டாம் வினாத்தாள்களில் அடங்கும் வினாக்களுக்கான கட்டுப்பாட்டு பரிசோதனை சபையினால் தயாரிக்கப்பட்ட மாதிரி விடைத் தொகுதிகளே உள்ளடங்கியுள்ளன. இவ்விடைகள் உதவி பரிசோதகர்களுக்கு விடைகளை மதிப்பிடுவதற்கான ஒரு வழிகாட்டி மட்டுமே ஆகும்.

வினாத்தாள் II இற்கான விடைகளில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான அடிப்படை விடயங்கள் மாத்திரமே உள்ளடங்கியுள்ளது. இவ் விடயங்களுக்கு மேலதிகமாக பரிட்சார்த்திகள் மேலதிக விடயங்களை முன் வைத்திருப்பின் அதன் பொருத்தப்பாட்டினை கவனத்திற் கொண்டு அதற்கான புள்ளிகளை வழங்க பரிசோதகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். விடைகளுக்கான புள்ளிகளை வழங்கும்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து பரிசோதகர் விசேட அவதானத்தினைச் செலுத்த வேண்டும்.

(அ). வினாவினை சரியாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளதா? அறிமுகம் மற்றும் ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் அதனை விளங்கிக் கொள்ள முடியும்.

(ஆ). வினாக்களுக்கு உரிய விடயங்களை சரியாகத் தெரிவு செய்துள்ளனரா? மற்றும் அவ்விடயங்களை சரியான முறையில் ஒழுங்கமைத்து முன்வைத்துள்ளனரா? என்பது தொடர்பாகவும்

(இ). விடயங்களை போதுமானளவு பகுப்பாய்வு செய்துள்ளனரா? என்பது பற்றியும்

(ஈ). இறுதி முடிவுக்கு வந்துள்ளனரா? மற்றும் இந்த இறுதி முடிவின் தர்க்கமுறை பொருத்தமுடையதா? என்பது பற்றியும்

பரீட்சார்த்திகள் விடையினுள் முன்வைக்கின்ற விடயங்கள் தொடர்பில் பிரச்சினைக்குரிய நிலைமை ஒன்று காணப்படுமாயின் அது தொடர்பில் பிரதான பரீட்சகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து தீர்மானம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும்.

CS CamScanner

## வினாப்பத்திரம் - I

ஒட்டுமொத்த பாடத்திட்டமும் வினாத்தாளில் உள்ளடங்கும் வகையில் A, B என இரு பிரிவுகளைக் கொண்டது. A பகுதியில் 5 தெரிவுகளைக் கொண்டது.

B பகுதி குறு விடைகள் 02 வீதம் எதிர்பார்க்கப்படும் 20 வினாக்களைக் கொண்டது.

ஒட்டுமொத்த பாடத்திட்டம் தொடர்பில் பரீட்சார்த்தியின் விடய ரீதியான தெரிவினை பரிதோதிப்பது இப்பிரிவின் நோக்கமாகும்.

## வினாப்பத்திரம் - II

மூன்று பகுதிகளையும் 10 வினாக்களையும் கொண்டது.

பகுதி I - கட்டுரை மற்றும் அரைக் கட்டமைப்பு வகை வினாக்கள் 03 காணப்படும்.

பகுதி II - கட்டுரை மற்றும் அரைக் கட்டமைப்பு வகை வினாக்கள் 04காணப்படும்.

பகுதி III - கட்டுரை மற்றும் அரை கட்டமைப்ப வகை வினாக்கள் 03காணப்படும்.

பகுதி I அரசியல் விஞ்ஞான பாடத்தினுள் உள்ளடங்கியுள்ள கோட்பாடுகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு, தெளிவினை பரிசோதிப்பதே வினாப்பத்திரத்தின் இப்பகுதியின் நோக்கமாகும். இதன்படி சில வினாக்களின் மூலம் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கருக்கள் தொடர்பாக நேரடியாக பரீட்சார்த்தியின் அறிவனை பரிசோதிப்பதோடு மேலும் சில வினாக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் சிலவற்றின் ஊடாக கோட்பாடு மற்றும் நடைமுறை என்பவற்றிற்கிடையில் காணப்படும் தொடர்புகள் பற்றிய பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் தெளிவு என்பன பரிசோதிக்கப்படும்.

பகுதி II இன் நோக்கம் யாதெனில் இலங்கையில் பிரித்தானியர் காலணித்துவ காலத்தில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல், பொருளாதார மற்றம் சமூக மறுசீரமைப்புக்களின் தாக்கங்கள் மற்றம் அதன் பெறுபேறுகள் தொடர்பாக சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு வளர்ச்சிகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு மற்றும் தெளிவினைப் பரிசோதிப்பதாகும்.

பகுதி III இன் நோக்கம் யாதெனில் ஒப்பீட்டு அரசியலமைப்பு, சர்வதே அரசியலின் புதிய அசைவியக்க தளத்தில் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை தொடர்பாகவும், ஒட்டுமொத்த பாடத்திட்டத்தோடு தொடர்புடைய தனித் தலைப்புக்கள் சில தொடர்பில் பரீட்சாத்தியிடம் காணப்படும் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பதாகும்.



CamScanner

**பகுதி II இற்கான அறிவுறுத்தல்கள்**

இவ்வினாக்கள் மொத்தமாக 20 புள்ளிகளைக் கொண்டவை. புள்ளிகளை வழங்குகையில் பின்வரும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும்.

(i) அறிமுகம் / விடைக்கான பிரவேசம் - உயர்ந்தபட்சம் 03 புள்ளிகள்
(ii) முக்கிய விடயங்கள் / கருத்துக்கள், கலந்துரையாடல் - உயர்ந்தபட்சம் 15 புள்ளிகள்
(iii) முடிவுரை - உயர்ந்தபட்சம் 02 புள்ளிகள்

மேற்கூறப்பட்டவாறு புள்ளிகளை வழங்குவதுடன் பின்வரும் வழிகாட்டற் குறிப்புக்களையும் கருத்திற் கொள்ளவும்.

(அ) **அறிமுகம் விடைக்கான பிரவேசம்:** ஒரு அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம். எவ்வாறாயினும் வினாவை வேறுவடிவத்தில் மீளஎழுதுவதாக அமையக்கூடாது. விடையின் உள்ளடக்கத்தை அறிமுகம் செய்வதாக அமைந்திருத்தல் வேண்டும். புள்ளிவழங்கும்போது தரப்பட்டுள்ள விடைக்குப் பொருத்தமான விடயங்கள் அறிமுகத்தில் எழுதப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்த்து புள்ளி வழங்கவும். பலவீனமானதோர், பொருத்தமற்றதோர் அறிமுகத்திற்கு புள்ளிகள் வழங்குவதா இல்லையா என்பதைப் பரீட்சகர்கள் தீர்மானிக்கமுடியும். நல்ல, தரமான, போதியளவு, கருத்துக்களைக் கொண்டுள்ள அறிமுகம் / விடைக்கான பிரவேசம் ஆகியவற்றைக் கொண்ட விடைக்கே முழுமையான புள்ளிகளை வழங்க முடியும்.

(ஆ) **கலந்துரையாடல்:** ஒவ்வொரு விடைக்கான முக்கிய விடயங்கள்/ கருத்துக்களை புள்ளிவழங்கும் திட்டம் வழங்குகின்றது. பரீட்சகர்கள் புள்ளிவழங்கும் திட்டத்திலுள்ள விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா, போதியளவு விவரிக்கப்பட்டுள்ளதா என்பதனை புள்ளி வழங்கும்போது சரிபார்த்தல் வேண்டும். வெறுமனே கருத்துக்களை மட்டும் (Points) குறிப்பிடுவது ஒருநல்ல விடையாகாது. பரீட்சார்த்திகள் தமது கலந்துரையாடலில் சுயாதீன அறிவினை மற்றும் அரசியல் விஞ்ஞான பாடத்துடன் தொடர்புடைய புதிய தகவல்களை முன்வைத்திருப்பார்களாயின் அதற்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

(இ) முடிவுரை: இது வினாவை மீள எழுதுவதன்று. ஒரு சிறந்த முடிவுரை பின்வரும் விடயங்களைக் கொண்டமைதல் வேண்டும்.

01 விடையில் வழங்கப்பட்டுள்ள விடயங்களின் சரியான சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்

02 வழங்கப்பட்டுள்ள விடையின் பகுப்பாய்வு சுருக்கம் ஒன்றினை முன்வைத்தல்

03 பரீட்சார்த்தி விடையில் முன்வைத்துள்ள பிரதான வாதங்கள் இவ்வினா பற்றிய பரீட்சார்த்தியின் சுய அவதானிப்பு/ பகுப்பாய்வு வாதம் ஆகியவற்றை முன்வைக்கலாம்.

04. முடிவுரை ஒன்று அல்லது இரண்டு பந்திகளில் அமையலாம்.

சிலநேரங்களில் பரீட்சார்த்திகள் முடிவுரை என குறிப்பிடாமல் தமது விடையினை நிறைவு செய்திருக்க முடியும். இது குறித்து பரீட்சகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.



CamScanner

## பகுதியளவிலான கட்டமைப்பு வினாக்கள்

இவ் வினாப்பத்திரத்தில் நான்கு பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளன. பரீட்சார்த்திகள் வழங்கப்பட்டுள்ள பல தெரிவுகளில் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்

பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட விடைகளை மதிப்பிடுகையில் பின்வரும் வழிகாட்டலைப் பின்பற்றவும்.

i. பரீட்சார்த்திகள் ஒவ்வொரு தலைப்புக்கும் நீண்ட விடையை எழுதவேண்டும் என எதிர்பார்க்கப்படவில்லை. பொதுவாக சுருக்கமான விடையாக இருத்தல் வேண்டும். அதேவேளை தலைப்பின் அனைத்து பிரதான விடயங்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

ii. பகுதியளவிலான கட்டமைக்கப்பட்ட வினாவுக்கான விடை கட்டுரைவினாவினைப் போன்று பின்வரும் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவையாவன

(i) அறிமுகம் விடைக்கான பிரவேசம் - உயர்ந்தபட்சம் 01 புள்ளி

(ii) தரவுகளை கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட விவரிப்பு: உயர்ந்தபட்சம் 08புள்ளிகள். கலந்துரையாடலுக்கு புள்ளி வழங்கும்போது விடையின் தரம், குறிப்பாக பாடம் தொடர்பான ஆழமானஅறிவு, சுயாதீனஅறிவு, விவரண மற்றும் பகுப்பாய்வுதிறன்கள், மொழிநடை மற்றும் முன்வைக்கும் திறன் என்பவற்றினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

(iii) முடிவுரை – உயர்ந்தபட்சம் 01 புள்ளி

குறிப்பு : சில பரீட்சார்த்திகள் கட்டுரைவகை மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்கையில் அறிமுகம்/ விடைக்கான பிரவேசம், முடிவுரை ஆகியவற்றை வெளிப்படையாகக் குறிப்பிடாது எழுதியிருக்கலாம். தயவுசெய்து அவை பற்றிக் கருத்திற் கொண்டு உரிய புள்ளிகளை வழங்கவும்

CamScanner

[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

சுட்டெண் : ..................................................

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாள் **A**, **B** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
* சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 2 | |
| 2 | 3 - 8 | |
| 3 | 9 - 14 | |
| 4 | 15 - 19 | |
| 5 | 20 - 25 | |
| 6 | 26 - 30 | |
| 7 | 31 - 40 | |
| 8 | 41 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

* 1 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, அந்த இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** அரசியல்
(1) சமூக வாழ்க்கையில் எல்லா இடங்களிலும் காணப்படும்.
(2) மரணத்திற்குப் பின்னரான வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாகும்.
(3) சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
(4) அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.
(5) பலாத்கார அதிகாரத்தின் ஊடாக மாத்திரம் வெளிப்படுத்தப்படுகின்றது.

(......)

**2.** அரசியல் தொடர்பான விஞ்ஞான ரீதியான கற்கையின் நோக்கமாவது
(1) சமூக வாழ்க்கைக்கு பிரஜைகளைப் பயிற்றுவிப்பதாகும்.
(2) அரசியல் நிறுவனங்களுக்கு பிரஜைகளை நெறிப்படுத்துவதாகும்.
(3) அரசியலை முறையாக விளங்கிக்கொள்வதாகும்.
(4) சமூகத்தின் நெறிமுறைகள் மற்றும் விழுமியங்களை வளர்ப்பதாகும்.
(5) பிரஜைகளை நன்னடத்தைக்காக நெறிப்படுத்துவதாகும்.

(......)



CamScanner

3. பொதுக் கொள்கையானது
   (1) எந்தவொரு சமூகப் பிரச்சினைக்குமான அரசாங்கத்தின் பிரதிபலிப்பாகும்.
   (2) அரசாங்க நிறுவனங்களின் ஊடாக மாத்திரம் அமுல்படுத்தப்படுவதாகும்.
   (3) உயர்மட்ட பணியகவமைப்பினரால் உருவாக்கப்படுவதாகும்.
   (4) அரசியல் அதிகாரத்தில் உள்ளோரால் தீர்மானிக்கப்படுகின்ற ஒரு நோக்கத்துடன் கூடிய நடவடிக்கையாகும்.
   (5) நிர்வாக அதிகாரிகளினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்ற விரிவான செயற்பாடுகளாகும்.

(......)

4. சுவிட்சர்லாந்தின் அரசாங்க முறை
   (1) உலகத்தில் தற்போது காணப்படும் ஒரேயொரு கூட்டு சமஷ்டியாகும்.
   (2) அதிகாரத்தினை ஒதுக்கும்போது முதலில் கீழ்மட்ட அரசியல் நிறுவனங்களுக்கு அதிகாரத்தினை வழங்குதல் (subsidiarity) என்ற தத்துவத்தினைப் பின்பற்றுகின்றது.
   (3) ஒரு தனியான அரசியலமைப்பு நீதிமன்றத்தினைக் கொண்டுள்ளது.
   (4) கம்யூன்களின் சுயாதீனத்தன்மையினை மறுப்பதற்கான அதிகாரத்தினை கன்டோன்களுக்கு வழங்குகின்றது.
   (5) அண்மைக் காலங்களில் அதிகளவில் மத்தியமயப்பட்டுள்ளது.

(......)

5. ஒற்றையாட்சி அரசு
   (1) எப்பொழுதும் அதிகாரப் பரவலாக்கத்தினை ஊக்குவிக்கின்றது.
   (2) பன்முகத்தன்மை கொண்ட சமூகங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
   (3) இனத்துவ சிறுபான்மையினரின் கோரிக்கைகளுக்கு ஈடுகொடுக்கும் இயலுமையை உறுதி செய்துள்ளது.
   (4) ஒட்டுமொத்த அதிகாரங்களுடன் கூடிய ஒரு மத்திய அரசாங்கத்தினைக் கொண்டுள்ளது.
   (5) உலகமயமாக்கத்தின் அழுத்தத்தில் இருந்து விடுபட்டுள்ளது.

(......)

6. இலங்கை
   (1) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் நிரந்தரமற்ற உறுப்பினராக இருந்துள்ளது.
   (2) 1948 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினராகியது.
   (3) ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்திற்கு (UNDP) பெரும் தொகையான பணத்தினை பங்களிப்புச் செய்துள்ளது.
   (4) அனைத்துலக மனித உரிமை பிரகடனத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது.
   (5) அணிசேரா இயக்கத்தில் அதன் ஆரம்பத்திலேயே உறுப்பினராவதற்கு மறுத்தது.

(......)

7. சர்வதேச அரசு - சார்ந்த அமைப்புக்கள்
   (1) உறுப்பு நாடுகளின் கூட்டு நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
   (2) பல்தேசியக் கம்பனிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
   (3) உலகளாவிய சிவில் சமூகத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
   (4) பொருளாதார உலகமயமாக்கத்தினைத் தடுக்கின்றன.
   (5) சந்தை சக்திகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

(......)

8. கோல்புறுக் - கமரன் ஆணைக்குழு
   (1) கண்டிய உயர் குழாம் நில பிரபுத்துவ முறைமையை இல்லாதொழிக்க சிபாரிசு செய்தது.
   (2) இலங்கையில் இரட்டை நிர்வாக முறைமையினை தொடர்ந்து பேணுவதற்கு சிபாரிசு செய்தது.
   (3) மரபுரீதியான சமூக உருவாக்கத்தினை தொடர்ந்து பேணுவதற்கு சிபாரிசு செய்தது.
   (4) நீதித்துறையை மேற்பார்வை செய்யும் அதிகாரங்களை ஆளுநருக்கு வழங்க சிபாரிசு செய்தது.
   (5) சுதேசியர்கள் மத்தியில் சமூக நகர்வினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிபாரிசு செய்தது.

(......)

9. அரசியல் பொருளாதார அணுகுமுறை
   (1) மார்க்சிசக் கோட்பாட்டினை மாத்திரம் முன்மாதிரியாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டது.
   (2) அரசியல் என்பது பொருளாதாரக் காரணிகளுடன் பின்னிப் பிணைந்தவை எனக் குறிப்பிடுகின்றது.
   (3) தாராளவாத பொருளாதாரக் கோட்பாட்டின் செல்வாக்கிலிருந்து விடுபட்டதாகும்.
   (4) அனுபவரீதியான ஆதாரங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாகும்
   (5) காலனித்துவத்துக்கு உட்பட்டவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதனை ஊக்குவிக்கின்றது.

(......)

10. காலனித்துவ அரசு
   (1) காலனித்துவவாதிகளுக்கும் காலனித்துவத்திற்கு உட்பட்டவர்களுக்கும் இடையிலான உறவினை விபரிக்கின்ற ஒரு எண்ணக்கருவாகும்.
   (2) காலனித்துவத்திற்கு உட்பட்டவர்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.
   (3) காலனித்துவத்தில் காணப்பட்ட நிலைமையினைத் தொடர்ந்தும் (*status quo*) பேணியது.
   (4) சுதேசிய மதங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றது.
   (5) சமூக வாழ்வில் சுதேசிய விழுமியங்களை ஊக்குவிக்கின்றது.

(......)

11. மோதல் முகாமைத்துவம் என்பது
   (1) மோதல் இணக்கப்பாட்டில் (conflict settlement) இருந்து வேறுபடுத்த முடியாதது.
   (2) மோதலில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் இறுக்கமான நிலைப்பாட்டினை எடுக்கும் பொழுது மாத்திரமே சாத்தியமாகும்.
   (3) மோதல் தரப்பினர்களின் நடத்தைகள் அலட்சியம் செய்யப்படுகின்ற பொழுது சாத்தியமாகும்.
   (4) வன்முறையற்ற தொடர்பாடல் உபாயங்கள் அலட்சியம் செய்யப்படுகின்ற பொழுது சாத்தியமாகும்.
   (5) மோதல் தரப்பினரின் பொதுவான நலன்கள் அங்கீகரிக்கப்படுகின்ற பொழுது வெற்றியளிக்கின்றது.

(......)

12. அரசியல் கட்சிகள்
   (1) பிரதிநிதித்துவ அரசாங்கத்தின் ஒரு பிரதான நிறுவனமாகும்.
   (2) நீண்ட வரலாற்றினைக் கொண்டவையாகும்.
   (3) ஆசிய நாடுகளிலேயே முதலில் வளர்ச்சியடைந்தன.
   (4) அழுக்கக் குழுக்களில் இருந்து பிரிக்க முடியாதவையாகும்.
   (5) இலங்கையில் அண்மைக்காலங்களில் ஒருபோதும் இல்லாத அளவுக்கு பொது மக்களின் நம்பிக்கையினைப் பெற்றுள்ளன.

(......)

13. சிவில் சமூகம்
   (1) சமூகத்தில் தொழிலாளர் வகுப்பினருக்கு முன்னுரிமை வழங்குகின்றது.
   (2) அரசு மற்றும் தனியார் ஆகிய இரண்டு நிறுவனங்களையும் கொண்டுள்ளது.
   (3) அரசுக்கும் சந்தைக்குமிடையிலான ஒரு பொதுத் தளமாகும்.
   (4) அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படுகின்றது.
   (5) அரசியல் கட்சிகளுக்கான மாற்றீடாக அமைந்துள்ளது.

(......)

14. சமகால இலங்கையின் அரசியல் கட்சி முறைமை
   (1) பல கட்சிகள் செயற்படுவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளது.
   (2) இரு கட்சி முறையினைக் கொண்டுள்ளது.
   (3) ஆதிக்க ஒரு கட்சி முறையினைக் கொண்டுள்ளது.
   (4) கூட்டரசாங்கத்தினை ஊக்குவிப்பதில்லை.
   (5) ஒரு கட்சி முறையினைக் கொண்டுள்ளது.

(......)

CamScanner

15. சர்வதேச நாணய நிதியம் (IMF)
(1) அபிவிருத்தியடைந்துவரும் தேசங்களுக்கு அபிவிருத்தி உதவிகளை வழங்குகின்றது.
(2) அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தினை ஒழுங்குபடுத்துகின்றது.
(3) அங்கத்துவ நாடுகளின் நிதி ஸ்திரத்தன்மைக்கு உதவுகின்றது.
(4) தேசிய பொருளாதாரத்தில் பலமான பொதுத்துறையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது.
(5) ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார அங்கமாகும்.

(......)

16. இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு
(1) நாட்டினை ஒரு மதச்சார்பற்ற அரசாக மாற்றியது.
(2) வெஸ்ட்மினிஸ்டர் முறையின் விசேட பண்புகளைத் தொடர்ந்து பேணியது.
(3) சட்டப் பரிகாரத்துடன் கூடிய ஒரு முழுமையான அடிப்படை உரிமை அத்தியாயத்தினை உள்ளடக்கியது.
(4) ஒரு பலமான அரசியலமைப்பு நீதிமன்றத்துக்கான ஏற்பாடுகளை வழங்கியது.
(5) அரசியலமைப்பில் ஒரு புரட்சி என்று கருதப்பட்டது.

(......)

17. இலங்கையின் 1978 ம் ஆண்டு அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம்
(1) தேசிய பாதுகாப்பினைத் தவிர ஏனைய அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளது.
(2) எஞ்சிய (ஒதுக்கு) அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளது.
(3) ஆளுனருக்கு மாகாணத்துக்குள் அவசரகால நிலைமையினைப் பிரகடனப்படுத்துவதற்கான அதிகாரத்தினை வழங்கும் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.
(4) உள்ளூராட்சி சபைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தினை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.
(5) முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் ஜனாதிபதி ஆளுனரை நியமிப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

(......)

18. பின்வருவனவற்றுள் பிரான்சிய உள்ளூராட்சி முறைமையினை மிகச் சரியாக விபரிக்கும் கூற்று எது?
(1) அது நான்கு உப தேசிய அரசாங்க மட்டங்களைக் கொண்டமைந்துள்ளது.
(2) அது ஒரு முழு அளவிலான அரசியல் அதிகாரப் பரவலாக்கத் திட்டமொன்றுக்குள் பரிணாமமடைந்துள்ளது.
(3) அது உள்ளூர் விவகாரங்களில் கம்யூன்கள் தமது தற்துணிபு அதிகாரத்தினைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கின்றது.
(4) அது நிர்வாக அதிகாரத்தினை பன்முகப்படுத்துவதற்கான (செறிவு நீக்கம்) ஒரு ஏற்பாடாகும்.
(5) அது சிறுபான்மை இனத்தவர்களுக்கு அதிகாரத்தினைப் பரவலாக்குவதற்கான ஒரு வெற்றிகரமான முயற்சியாகும்.

(......)

19. 'சட்டத்தின் ஆட்சியின்' அடிப்படை யாதெனில்
(1) ஆள்வோரையும் ஆளப்படுவோரையும் சட்டத்தின் முன் சமமாக நடத்துதல் ஆகும்.
(2) அவசரகால நிலைமையின்போது ஆட்சியாளர்கள் சாதாரண சட்டங்களை மீறிச் செல்வதற்கான இயலுமையினை வழங்குவதாகும்.
(3) அரசின் தலைவருக்கு சட்டத்தில் இருந்து விடுபடும் உரிமையினை வழங்குதல் ஆகும்.
(4) தனிப்பட்டவர்கள் வேறுபட்ட திறமைகள் மற்றும் ஆற்றல்களைக் கொண்டுள்ளனர் என்பதனை சட்டத்தின் முன் ஏற்றுக்கொள்ளுதல் ஆகும்.
(5) ஆட்சியாளர்கள் தமக்குள்ள தற்துணிபு அதிகாரத்தின் அடிப்படையில் செயற்படுவதற்கான சுதந்திரத்தினை உத்தரவாதப்படுத்துவதாகும்.

(......)

CamScanner

20. பல்துருவ அதிகார சமநிலை குறித்து நிற்பது
   (1) இரண்டு ஆதிக்கம் மிக்க சக்திகள் சர்வதேச முறைமையின் மீது செல்வாக்குச் செலுத்துவதனையாகும்.
   (2) பல்வேறு ஆதிக்கம் மிக்க சக்திகள் சர்வதேச முறைமையின் மீது செல்வாக்குச் செலுத்துவதனையாகும்.
   (3) பிராந்திய ஒத்துழைப்பினை பலவீனப்படுத்துவதனையாகும்.
   (4) வல்லரசுகளுக்கிடையிலான உயர் மட்ட ஒத்துழைப்பினையாகும்.
   (5) ஒரு மேலாதிக்க சக்தி (hegemonic) சர்வதேச முறைமையின் மீது செல்வாக்குச் செலுத்துவதனையாகும். (......)

- 21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து சரியான கூற்றுத் தொகுதியினைக் கொண்ட விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. பெண்ணியல்வாத அரசியல் கோட்பாடானது
   A - அரசு தொடர்பான ஒரு விசேட கோட்பாட்டினை முன்வைக்கவில்லை.
   B - தனிப்பட்ட விடயங்களை அரசியலாகக் கருதுகின்றது.
   C - ஆணாதிக்கத்தினை மையப்படுத்திய அதிகாரக் கட்டமைப்பினை விமர்சிக்கின்றது.
   D - பெண்கள் மீதான ஆதிக்கத்திற்கான தனிமுதன்மைக் கருவியாக அரசினைக் கருதுகின்றது.
   E - ஆணாதிக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூக உறவினை இல்லாதொழிப்பதனை வலியுறுத்துகின்றது.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

22. 'அரசியல் என்பது அரசு தொடர்பான கற்கை' என்பதன் மூலம் கருதப்படுவது
   A - அரசின் இயல்பினைக் கற்பதனையாகும்.
   B - பிரஜைகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான உறவினைக் கற்பதனையாகும்.
   C - அரசாங்கத்தின் செயன்முறையினைக் கற்பதனையாகும்.
   D - அரசாங்கத்தின் வகைகளைக் கற்பதனையாகும்.
   E - பிரஜைகளின் வாக்களிக்கும் நடத்தையினைக் கற்பதனையாகும்.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

23. அரசு
   A - சிவில் சமூகத்தின் விருப்பத்திற்குக் கீழ்ப்பட்டது.
   B - வரலாற்று ரீதியாகப் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது.
   C - சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது.
   D - தொட்டுணர முடியாவிட்டாலும் ஒரு யதார்த்த தோற்றமாகும்.
   E - தனது தொடர்ச்சியான இருப்புக்கு சட்டத்தன்மையில் தங்கியுள்ளது.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

24. தேசிய அரசு
   A - வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசம் ஒன்றினைக் கொண்டுள்ளது.
   B - பலாத்கார அதிகாரத்தின் ஏகபோக உரிமையினை அனுபவிப்பதற்கான உரித்தினைக் கோருகின்றது.
   C - அரசு சாரா செயற்பாட்டாளர்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது.
   D - வெஸ்ட்பாலியா உடன்படிக்கையின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டது.
   E - வெளிச் சக்திகளின் கட்டளைகளுக்கு அடிபணிவதற்கு எதிர்ப்பினைக் காட்டுகின்றது.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

25. தூய ஜனாதிபதித்துவ அரசாங்க மாதிரி
   A - அதிகார வேறாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.
   B - நிறைவேற்று மற்றும் சட்டத்துறை ஆகியன வேறுபட்ட இருப்பினைக் கொண்டிருக்க இடமளிக்கின்றது.
   C - ஜனாதிபதியானவர் அரசின் மற்றும் நிறைவேற்றுத் துறையின் தலைவராக இருப்பதற்கு இடமளிக்கின்றது.
   D - சட்டத்துறையினை நிறைவேற்றுத்துறைக்குக் கீழ்ப்பட்டதாக்குகின்றது.
   E - ஜனாதிபதியை பதவி நீக்குவதனை கடினமாக்குகின்றது.
   (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

CamScanner

- 26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| 26. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் உயிர் வாழ்வதற்கான உரிமை தொடர்பான ஏற்பாடுகளைத் தெளிவாக வழங்கியுள்ளது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் சித்திரவதையில் இருந்து சுதந்திரம் பெற்றுக் கொள்வதற்கான உரிமையினை உத்தரவாதம் செய்கின்றது. | (......) |
| 27. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு நீதித்துறையின் சுயாதீனத்தன்மையினைப் பாதுகாப்பதற்கு சில ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் மாகாண மேல் நீதிமன்றங்களுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. | (......) |
| 28. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 126வது உறுப்புரையானது அடிப்படை உரிமை மீறல்களுக்கு சட்ட ரீதியான பரிகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகளை குறிப்பிடுகின்றது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 19 வது திருத்தம் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவினை பலவீனப்படுத்தியுள்ளது. | (......) |
| 29. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதியை பதவி நீக்குவதனைக் கடினமாக்கியுள்ளது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதியை அரசியல் காரணங்களின் அடிப்படையில் பதவி நீக்குவதனை தடுக்கின்றது. | (......) |
| 30. | இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை தேசிய மொழிகளாக்கியது. | இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு பொதுச் சேவையினை பூரண சுயாதீனமாக்குவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. | (......) |

CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස. (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)**

**විෂය අංකය / பாட இலக்கம்: 23**

**විෂය / பாடம்: அரசியல் விஞ்ஞானம்**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 5 | 21. | 2 |
| 02. | 3 | 12. | 1 | 22. | 1 |
| 03. | ~~3~~ 4 | 13. | 3 | 23. | 5 |
| 04. | 2 | 14. | 1 | 24. | 3 |
| 05. | 4 | 15. | 3 | 25. | 2 |
| 06. | 1 | 16. | 2/5 | 26. | 3 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 1 |
| 08. | 5 | 18. | 4 | 28. | 2 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 5 |
| 10. | 1 | 20. | 2 | 30. | 4 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :
එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු 02 බැගින් / 02 புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60

CS CamScanner

## பகுதி B

31. 'அரசியலைக் கற்பது' என்பது பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

32. ஒப்பீட்டு அரசியல் கற்கையில் மூன்று பிரதான மரபுகள் / பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

33. ஜோன் லொக் அரசாங்கத்தின் மூன்று பிரதான பொறுப்புகள் தொடர்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

34. தாராளவாத ஜனநாயகத்தின் இரண்டு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

35. சமூக இயக்கங்களில் இருந்து அரசியல் கட்சிகளை வேறுபடுத்திக் காட்டும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

36. குடியுரிமை தொடர்பான நவீன கோட்பாடு மூன்று வகையான குடியுரிமையினை அடையாளம் கண்டுள்ளது. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

37. விஞ்ஞான சோசலிசத்தின் இரண்டு முன்னோடி கோட்பாட்டாளர்களைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

38. (1) சமூக ஜனநாயக சிந்தனைகளை முன்வைத்த ஜேர்மன் நாட்டின் முன்னோடி சிந்தனையாளரின் பெயரினைக் குறிப்பிடுக.

......................................................................................................

(2) சமூக ஜனநாயக சிந்தனையினை முதல் முதலில் முன்வைத்த அரசியல் கட்சி எது?

......................................................................................................

39. பாசிசத்தின் ஏதேனும் இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................

40. பெண்ணியல்வாத அரசியல் மரபுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ......................................................................................................

(2) ......................................................................................................



CamScanner

41. காலனித்துவத்தினை உருவாக்குவதற்கான இரண்டு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

42. (1) பிரித்தானிய பொதுநலவாயத்துக்குள் இலங்கை 'டொமினியன் அந்தஸ்தினைப்' பெற்றுக்கொண்ட ஆண்டு எது?

..................................................................................................

(2) இலங்கை எந்த ஆண்டில் குடியரசாக மாற்றப்பட்டது?

..................................................................................................

43. சோல்பரி அரசியலமைப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இரண்டு விமர்சனங்களைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

44. இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இரண்டு விமர்சனங்களைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

45. இலங்கையின் 1978 ம் ஆண்டு மூல அரசியலமைப்பில் பாராளுமன்றம் தொடர்பாக பல அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

46. அரசியல் விஞ்ஞானப் பரிசீலனைகள் இரண்டு பிரதான வகைப்பாட்டுக்குள் அடங்கும். அவற்றினைப் பெயரிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

47. நவீன அரசியல் கட்சிகளின் பணிகளில் எவையேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

48. இந்திய அரசியலமைப்பு மூன்று வகையான அவசரக்கால நிலைமைகளை அங்கீகரித்துள்ளது. அவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

49. இலங்கை அங்கத்துவம் பெற்றுள்ள சர்வதேச அரசு - சார்ந்த அமைப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1) ..................................................................................................

(2) ..................................................................................................

50. சார்க் அங்கத்துவ நாடுகள் SAFTA மற்றும் SAPTA ஆகிய உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டுள்ளன.

(1) SAFTA என்பதன் மூலம் குறிப்பிடப்படுவது யாது?

..................................................................................................

(2) SAPTA என்பதன் மூலம் குறிப்பிடப்படுவது யாது?

..................................................................................................



CamScanner

## பகுதி- B

31) 01. அரசியலை பொது அறிவுக்காக கற்றல்

02. முறையான அல்லது கோட்பாட்டு ரீதியான அறிவினைப் பெற்றுக்கொள்ள அரசியலைக் கற்றல்

32) 01. மரபு ரீதியான அல்லது பழமை அணுகுமுறை

02. 20-ம் நூற்றாண்டு அணுகுமுறை

சமகால அணுகுமுறை அல்லது நவீன அணுகுமுறை

33) 01. உயிரைப் பாதுகாத்தல் / வாழ்க்கையைப் பாதுகாத்தல்.

02. சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

03. சொத்துக்களைப் பாதுகாத்தல்

34) சர்வஜன வாக்குரிமை அல்லது காலத்துக்கு காலம் நீதியான நியாயமான தேர்தல்

மக்கள் சம்மதம்

மக்களுக்கு பொறுப்புக்கூறல்

திறந்தப் போட்டி

வரையறுக்கப்பட்ட அரசாங்கம்

சுதந்திரமான நீதித்துறை

தனிமனித சுதந்திரம்

வலுவேறாக்கம்

மக்கள் இறைமை

அரசியல் பன்மைத்துவம்

திறந்த பொருளாதாரம்.

பொறுப்பான்மை, வெளிப்படைத்தன்மை, அரசியலமைப்பு அரசாங்கம், சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாத்தல், தனிநபர் சொத்துரிமை, சுதந்திரச் சந்தை, தடைகள் மற்றும் சமன்பாடுகள், சட்டத்தின் ஆட்சி, ஊடக சுதந்திரம் (அரசியல் பன்மைத்துவம்.)

35)

1. அரசியல் கட்சிகள் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக ஒழுங்கமைந்துள்ளதுடன், அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்துகின்றன.
2. அரசியல் கட்சிகளுக்கு நிரந்தரமான ஆதரவாளர்கள் உள்ளனர். (அவை காலத்துக்கு காலம் மாறலாம், ஆயினும் ஆதரவாளர்கள் நிரந்தரமாக இருப்பர்).
3. அரசியல் கட்சிகளுக்கு கொள்கை சட்டகமொன்று காணப்படும் ( அரசியல் கருத்தியல் அல்லது பொருளாதார கொள்கை)
4. அரசியல் கட்சிகளுக்கு கருத்தியல் அடையாளம் அல்லது அடிப்படைகள் உண்டு
5. அரசியல் கட்சிகள் காலத்துக்கு காலம் கொள்கை விஞ்ஞானங்களை வெளியிடுவன.



CamScanner

6. சமூக இயக்கங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் மைய அமைப்புகள் (அரகலய)
7. அரசியல் கட்சிகளுக்கு முறையான அல்லது ஒழுங்கமைந்த கட்சி ஒழுங்கமைப்பு உண்டு. ஆனால் சமூக இயக்கங்களுக்கு அத்தகைய ஒழுங்கமைப்பு இல்லை.
8. அரசியல் கட்சிகள் பரந்த நோக்கங்களைக் கொண்டது, மாறாக சமூக இயக்கங்கள் வரையறுக்கப்பட்ட அல்லது குறுகிய பிரச்சினைகளை மையப்படுத்தி எழுச்சிபெறும், பின்னர் மறைந்துவிடும்.
9. அரசியல் கட்சிகள் பெரும்பாலும் நிலைத்திருக்கும்- ஆனால் சமூக இயக்கங்கள் நோக்கம் நிறைவேறியப் பின்பு கலைந்துவிடும்.

36) சமூகப் பிரஜாவுரிமை

அரசியல் பிரஜாவுரிமை

குடியியல் பிரஜாவுரிமை

37) கார்ல் மார்க்ஸ்

பிரடெரிக் ஏங்கல்ஸ்

38) எட்வட் பேர்ன்ஸ்டைன்

ஜேர்மனிய சமூக ஜனநாயகக் கட்சி அல்லது ஜேர்மன் நாட்டின் சமூக ஜனநாயகக் கட்சி

39) அனைத்தான்மை ஆட்சி அல்லது அரசு

அரசினை வணங்குதல்

தலைவர்களை வணங்குதல்

தீவிர இராணுவ வாதம்

தீவிர இனவாதம்

பயங்கரவாதத்தினையும் வன்முறையினையும் அரசியல் கருவியாகப் பயன்படுத்துதல்

40)

1. தாராள மரபு பெண்ணியல் வாதம்
2. தீவிர மரபு பெண்ணியல் வாதம்
3. சோசலிச பெண்ணியல்வாதம்
4. மார்க்ஸிய பெண்ணியல் வாதம்
5. பின் நவீன பெண்ணியல் வாதம்
6. பின் கட்டமைப்பு வாத பெண்ணியல் வாதம்
7. பின் காலனித்துவ பெண்ணியல் வாதம்
8. கறுப்பின பெண்ணியல் வாதம்

41) 1. ஏதாவது அரசொன்றில் வாழுகின்ற மக்கள் புதியதொரு நாட்டை அல்லது ஆள்புலத்தினை அடையாளம் கண்டு, அங்கு தாய் நாட்டிற்கு ஒப்பான அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிறுவனங்களை உருவாக்கி, அப்புதிய சமூகத்தினை தாய்நாட்டின் ஆளுகையின் அல்லது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல்.

2. ஒரு பலமான அரசு ஏற்கனவே மக்கள் வாழுகின்ற ஆள்புலத்தினை உடன்படிக்கை ஊடாகவோ, யுத்தம் செய்வதன் ஊடாகவோ கைப்பற்றி தனது ஆட்சியினை அப்பிரதேசத்தில் நிறுவுவது அல்லது நடத்துவது.

42) 1. 1947

2. 1972

43) 1. பிரித்தானிய சட்ட முறை மற்றும் டொமினியன் அந்தஸ்து தொடர்ந்தமை

2. பாராளுமன்ற இறைமை காணப்படாமை

3. குடியரசுக்கான பிரச்சாரம் பரந்தளவில் காணப்பட்டமை.

4. ஒரு முழுமையான அடிப்படை உரிமைகள் அத்தியாயம் காணப்படாமை

5. பொதுச் சேவை ஆணைக்குழு தொடர்பாக அரசியல்வாதிகளின் விமர்சனம்

6. மேன்முறையீடுகளில் பிரிவுக் கவுன்சில் கொண்டிருந்த அதிகாரம்

7. செனட் சபை மீதான விமர்சனங்கள்

8. மகா தேசாதிபதி தொடர்பான விமர்சனங்கள்

44) 1. அடிப்படை உரிமை மீறல்களுக்கு சட்டரீதியான பரிகாரம் காணப்படாமை

2. தேசிய அரசுப் பேரவை எல்லையற்ற அதிகாரங்களைக் கொண்டிருந்தமை அல்லது தனி முதன்மை அதிகாரம் பெற்றிருந்தமை

3. தேசிய அரசுப் பேரவை நீதித்துறையினை விட மேலான அதிகாரங்களைக் கொண்டிருந்தமை

4. பிரதமர் கொண்டிருந்த எல்லையற்ற அதிகாரங்கள்

5. சிறுபான்மையினர் உரிமைக் காப்பீடுகள் நீக்கப்பட்டமை

6. அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் உள்வாங்கப்படாமை

7. பலவீனமான அரசியலமைப்பு நீதிமன்றம்

8. அரசியலமைப்பு உருவாக்கத்தில் மக்கள் சம்மதம் பெறப்படாமை.

45) 1. பாராளுமன்றத்தினை கலைப்பதற்கான அதிகாரம்

2. பாராளுமன்றத்தில் உரையாற்றுதல், அமர்வுகளில் கலந்து கொள்வது, பாராளுமன்ற அமர்வுகளை ஒத்திவைப்பது

3. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்ற சில சட்டங்களுக்கு மக்கள் தீர்ப்பினை கோருவது

4. அவசர கால ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்தி பாராளுமன்ற சட்டங்கள் மீறிச்செல்லும் அதிகாரம்

46) நெறிமுறை சார்ந்தப் பரிசீலனை அல்லது இலட்சிய ரீதியானப் பரிசீலனை

விஞ்ஞான ரீதியானப் பரிசீலனை

47) பிரதிநிதித்துவம்

- ஆட்சேர்ப்பு செய்தல்
- உயர் குழாமினரை உருவாக்குதல் மற்றும் கட்சிக்குள் சேர்த்தல்
- அரசியல் இலக்குகளை வரையறுத்தல் அல்லது உருவாக்குதல்
- கட்சியின் நலன்களை பிரதிநித்துவம் செய்தல் அல்லது வெளிப்படுத்தல்
- அணிதிரட்டல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல்
- அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்

48) நிதி அவசரக்காலம்

தேசிய அவசரக்காலம்

மாநில அவசரக்காலம்

49) சார்க் அமைப்பு

பொதுநலவாய அமைப்பு

ஐக்கிய நாடுகள் சபை அல்லது அணிசேரா இயக்கம்/ Indian Ocean Rim Association (IORA) Bay of Bengal Initiative for Multi-Sectoral Technical and Economic Cooperation (BIMSTEC)

50) தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் அல்லது ஒப்பந்தம் (SAFTA)

தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு (SAPTA)

CamScanner

## பகுதி-II

**01. அரசியல் விஞ்ஞானத்தின் தன்மை மற்றும் பாடப்பரப்பினை விபரிக்குக.**

**நோக்கம்:** இவ் வினாவில் வலியுறுத்தப்படுவது அரசியல் தோற்றப்பாட்டின் தன்மை மற்றும் அரசியல் விஞ்ஞானப்பாடத்தில் கற்கப்படும் விடயங்கள் தொடர்பாக பரீட்சாத்திகளின் விபரிக்கும் திறனையாகும்.

பரீட்சாத்திகள் விடைக்கான அறிமுகமொன்றினை வழங்கலாம். இவ்வினா அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பரீட்சாத்திகளின் அறிவினை மதிப்பிட முற்படுகின்றது என்பதனை மதிப்பீட்டாளர்கள் கவனத்தில் கொள்வது அவசியமாகும். அரசியல் என்ற விடயத்தினை நோக்கும் போது அதில் இரண்டு அர்த்தங்கள் காணப்படுகின்றன. அவை,

**அறிமுகம்:**

I. ஒரு எண்ணக்கரு என்ற வகையில் அரசின் செயற்பாடுகள், அரசினை முகாமை அல்லது நிர்வாகம் செய்தல் மற்றும் ஆளுகை என்பன அடங்கும்.

II. பிரஜைகளுக்கிடையிலான ஒரு சமூக பிரயோகம் என்ற வகையில் அரசுக்கு அப்பால் இடம்பெறுகின்ற விடயமாகும். அரசியல் என்பது அரசுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத ஒன்றாக காணப்படுகிறது. அந்தவகையில், அரசியல் விஞ்ஞானக் கற்கை மற்றும் அதனுடைய பரப்பு மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்வாங்கியுள்ளது. **(03 புள்ளிகள்)**

**உள்ளடக்கம்:** அரசியல் தொடர்பாக பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் இல்லை. அது அரசு, அரசாங்கத்தின் கலை, மோதல் தீர்வு, அதிகாரத்துக்கான போராட்டம், பொது நிர்வாகம் என்ற அடிப்படையில் வரையறுக்கப்படுகிறது. குறிப்பாக, அரசின் விவகாரமாக அல்லது செயற்பாடுகளாக அரசியலை வரையறுப்பது அரசின் செயற்பாட்டின் மீது கவனம் செலுத்துவதையும் மறுபுறமாக, அதிகாரம் தொடர்பான போராட்டம், பொதுக்கொள்கை உருவாக்கும் என்பன அரசியல் தீர்மானம் எடுத்தல் செயல்முறையினையும் குறித்து நிற்கின்றது. அந்தவகையில், அரசியலின் தன்மை மற்றும் பாடப்பரப்பு இயங்கு தன்மை கொண்டதாகும்.

விஞ்ஞானம் என்பது அரசியலை முறையாக கற்பதனைக் குறித்து நிற்கின்றது. அந்த அடிப்படையில் இங்கு பாடப்பரப்பு என்பது, அரசியல் விஞ்ஞானத்தில் கற்கப்படுகின்ற விடயங்களை வலியுறுத்துகின்றது. அரசியல் சமூக செயற்பாட்டின் எல்லா அங்கங்களிலும் பரவிக் காணப்படுவதனால் அரசியலைக் கற்கும் மாணவர்கள் பரந்துபட்ட தலைப்புகளை கற்க முடியும்.

இவ்வினாவுக்கான சிறந்த விடையொன்றில் அரசியல் விஞ்ஞானம் என்பது அரசியல் தோற்றப்பாடுகள் அல்லது நிகழ்வுகள் தொடர்பாக கற்பதினை வலியுறுத்துவதாக அமைய வேண்டும்.

**கற்கப்படும் தலைப்புகள்,**

அரசும் அரசாங்கமும்
அதிகாரம் மற்றும் அதிகாரப் போராட்டம்
அரசியல் தத்துவம் அல்லது மெய்யியல்
அரசியல் கருத்தியல்

## திருத்தியமைக்கப்பட்டது

## அரசறிவியலின் தன்மை

அரசறிவியல் என்பது நமது சமூக வாழ்க்கையில் முக்கிய அம்சமாக காணப்படுகின்ற அரசியலை கற்கின்ற ஓர் கல்வி சார்துறை என எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

அரசியலை கல்வி சார் துறையாக கற்பது நீண்ட வரலாற்றினை கொண்டது. அரசியலை ஆரம்ப காலத்தில் முறையாக கற்கும் கல்வி சார் மரபு கிரேக்க கால முன்னோடி சிந்தனையாளர்களான பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. அரசியல் விஞ்ஞானத்தினை ஒரு பாடமாக பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கின்ற மரபு இன்றும் காணப்படுகின்றது. அரசியலை அரசியல்விஞ்ஞானமாக கற்பதென்பது பல அர்த்தங்களை கொண்டுள்ளது. அரசியலை கற்பது என்பதனுள் அதனை பகுப்பாய்வு செய்வது மற்றும் அவை தொடர்பாக ஆய்வு செய்வது மற்றும் அதன் வேறுபட்ட விடயங்களை ஆராய்வது என்பன அடங்கும். மேலும் இருக்கின்ற அரசியல் கோட்பாடுகளை விமர்சித்தல், புதிய கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் கட்டியெழுப்புதல், பொதுக்கொள்கைகள் விமர்சித்தல், மாற்றுகொள்கைகளை பிரேரித்தல், பிரஜைகளையும் அரசியலில் ஈடுபடுவோரையும் பயிற்றுவித்தல் என்பனவும் இதில் உள்ளடக்கப்படும்.

இன்றும் கூட பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் அரசறிவியல் கற்பிப்பது என்பது மூன்று நோக்கங்களை கொண்டு இடம்பெறுகின்றது. அது இக்கற்கையின் அடிப்படை அம்சமாக காணப்படுகின்றது. இவை அரசறிவியலின் தன்மையினை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

1 அரசறிவியல் ஒரு பழமையான கற்கை துறை, கிரேக்கத்தில் இக்கற்கைத்துறை (கி.மு) 4ம் மற்றும் 5ம் நூற்றாண்டுகளில் மெய்யியல், கணிதம் அளவையியல், ஒழுக்கவியல் மற்றும் அழகியல் ஆகிய துறைகளுடன் இணைந்த வகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

2. அரசறிவியலின் தன்மை, பாடப்பரப்பு, உள்ளடக்கம், முறைகள், கோட்பாடுகள் எண்ணக்கருக்கள் மற்றும் அணுகுமுறைகள் என்பன கடந்த 25 நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்று நிலைமாற்றம் கண்டுள்ளது.

3. அரசியல் விஞ்ஞானத்தில் பல அணுகுமுறைகள் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்கள் காணப்படுவதுடன் அவை அடிப்படையில் வேறுபட்டவை. அவை வேறுபட்ட மரபுகள் மற்றும் சிந்தனை பள்ளிகளுடன் அடையாளப்படுத்தப்படுகின்றன. இத்தகைய பன்மைத்தன்மை மற்றும் வேறுபாடுகள் அரசியலை கற்பதனை விருப்பத்திற்குரிய மற்றும் கற்க தூண்டும் துறையாக மாற்றியுள்ளது.

அரசியல் கோட்பாடு
அரச நிறுவனங்கள்
அரசியல் கட்சிகள் மற்றும் அழுக்கக் குழுக்கள்
சிவில் சமூகம்
ஒப்பீட்டு அரசியல்
பொதுக் கொள்கை, கொள்கை அமுலாக்கம் மற்றும் பொது நிர்வாகம்
அரசுகளுக்கிடையிலான உறவுகள்
மோதலும் மோதல் தீர்த்தல் செயன்முறையும்

பரீட்சாத்திகள் பாடப்பரப்பினை வேறுபட்ட வடிவங்களில் முன்வைத்திருக்கலாம். அவற்றை துல்லியமாக மதிப்பிட்டு முழுமையான புள்ளிகளை வழங்கவும். பரீட்சாத்திகள் பாடப்பரப்பு தொடர்பாக போதிய புரிதலை வெளிக்காட்டினால் முழுமையான புள்ளிகளை வழங்கவும். (15 புள்ளிகள்)

**முடிவுரை:** பரீட்சாத்திகள் முடிவுரையில் அரசியல் கற்கையின் இயங்கு தன்மையினையும் அரசியல் கற்கையின் வேறுபட்ட துறைகள் தொடர்பான புரிதலையும் முன்வைத்திருந்தால் 02 புள்ளிகள் வழங்கவும்.

**(02 புள்ளிகள்)**

**2. பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்க முறைகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்:** வினாவின் சொற்பதத்தினை புரிந்துக்கொண்டு இவ்விரு அரசாங்க முறைகளுக்கும் புள்ளி மதிப்பீட்டாளர்கள் புள்ளி வழங்க வேண்டும். அதாவது, பரீட்சார்த்திகள் வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்கும் திறனை இது குறிக்கிறது.

**அறிமுகம் (3 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் தமது விடையை பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி அரசாங்கத்தின் அறிமுகத்துடன் தொடங்கலாம்.

**உள்ளடக்கம் (15 புள்ளிகள்)**

**பாராளுமன்ற அரசாங்க முறை:**

பாராளுமன்ற அரசாங்க முறையியொன்றில் சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்கும் இடையில் தனித்தனியான இருப்பு காணப்படுவதில்லை. சட்டத்துறை மற்றும் நிறைவேற்று துறை ஆகிய இரண்டும் ஒரே தேர்தலில் தெரிவு செய்யப்படுகின்றன. பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கை கிடைக்கப் பெறுகின்ற கட்சி அல்லது குழு ஆட்சி அமைக்கின்றது. பெரும்பான்மை நம்பிக்கையை அரசாங்கம் வைத்திருக்கும் வரை அது பதவியில் இருக்கும். இங்கு சட்டமன்றம் நிறைவேற்றுத்துறையை கட்டுப்படுத்துவதையும் அதேவேளை நிறைவேற்றுத்துறை சட்டமன்றத்தை கட்டுப்படுத்துவதையும் அவதானிக்கலாம். ஏனெனில், இங்கு இருவரும் ஒருவரையொருவர் கட்டுப்படுத்த முடியும். பாராளுமன்றம் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட சட்டப் பணிகளை மேற்கொள்ளும் அதேசமயம் அரசாங்கத்தில்



CamScanner

செயற்பாடுகள் மற்றும் செயலற்ற தன்மை குறித்து விவாதிக்கும் ஒரு விவாத சபையாகவும் காணப்படும். பாராளுமன்ற அரசாங்க முறையில் தனிப்பட்ட உறுப்பினர்களின் முக்கியத்துவம் குறைவாக காணப்படும். ஏனெனில், தனிப்பட்ட உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட மசோதா மீதான அரசாங்கத்தின் சட்ட உருவாக்க நிகழ்ச்சி நிரல் பாராளுமன்றத்திடம் வழங்கப்படுகின்றது. பாராளுமன்ற அரசாங்க முறையில் அரசின் சம்பிரதாய தலைவரும் அரசாங்கத்தின் உண்மையான நிர்வாகியும் காணப்படுகின்றனர். கூட்டுப் பொறுப்பு என்பது பாராளுமன்ற அரசாங்க முறையின் முக்கிய மூலக் கொள்கையாகும். பாராளுமன்ற அரசாங்கமுறை ஜனநாயகத்தன்மை வாய்ந்தது, ஆனால் உறுதித்தன்மை குறைந்தது என விமர்சிக்கப்படுகின்றது.

குறிப்பு: இதனை விட மேலும் சில விடயங்களை பாராளுமன்ற அரசாங்க முறையுடன் தொடர்புபடுத்தி பரீட்சார்த்திகள் எழுதியிருக்கலாம். அவற்றினை கவனத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

**ஜனாதிபதித்துவ அரசாங்க முறை:**

ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில் சட்டமன்றத்திற்கும் நிறைவேற்றுத் துறைக்கும் இடையில் தனித்தனியான இருப்பு காணப்படுகின்றது. ஜனாதிபதி மற்றும் சட்டமன்றம் ஆகியன தனித்தனியான தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்படுவதோடு அவையிரண்டினது இருப்பும் தனித்தனி தேர்தல்களில் தங்கியுள்ளது. அரசாங்கத்தின் மூன்று முக்கிய துறைகளுக்கிடையில் ஒன்றை ஒன்று சமநிலைப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகளுடன் கூடிய அதிகார பிரிவினைக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டமன்றம் சட்டமன்றத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் வழங்கி சட்டத்தை உருவாக்கும் நிறுவனமாகும். இங்கு அரசின் தலைவர், நிறைவேற்றுத் துறையின் தலைவர் மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்பன ஒன்றாக காணப்படும். அரசியல் காரணங்களுக்காக நிறைவேற்றுத் துறையை பதவியில் இருந்து அகற்ற முடியாது, ஆனால், அரசியல் சாராத காரணங்களுக்காக நிறைவேற்றுத் துறையை பதவியில் இருந்து அகற்ற முடியும்.

பரீட்சார்த்திகள் மேலும் சில விடயங்களை எழுதியிருக்கலாம். அவற்றினை கவனத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

**முடிவுரை (2 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் தமது விடையை வேறுபாடுகளை சுட்டிக்காட்டி அத்தகைய வேறுபாடுகளுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு முடிவுரையை எழுதினால் அதற்கு புள்ளி வழங்க முடியும். (ஆயினும் புள்ளியிடும் மதிப்பீட்டாளர்கள் ஒரு சிறந்த இலட்சிய அறிமுகம், உள்ளடக்கம் மற்றும் முடிவுரைகளில் தங்கியிருக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.



CamScanner

வினா 03.

**i. ஜனநாயக ஆட்சிமுறை என்றால் என்ன என்பதனை வரையறை செய்க. (05 புள்ளிகள்)**

ஜனநாயக ஆட்சிமுறை என்பதனால் கருதப்படுவது யாது என்பதைக் குறிப்பிடும் பரீட்சார்த்தியின் திறனை மதிப்பிடுவதே இவ் வினாவின் நோக்கமாகும். பொதுவில் ஆட்சிமுறை என்பது ஒரு அரசு மற்றும் ஒழுங்கமைப்புகள் போன்றவற்றை ஆட்சி புரிகின்ற செயல் அல்லது முறையைக் குறிக்கிறது. ஒரு அரசியல் எண்ணக்கருவான இது அரசாங்கங்களின் செயற்திறன் மற்றும் அரசாங்கங்களின் சேவை வழங்குதலைக் குறிப்பிடுகிறது. மக்கள், சிவில் சமூகம் மற்றும் ஏனையோர் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் அதிகமாக பங்கேற்பதன் மூலம் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஜனநாயகத்தினை கட்டியெழுப்ப முடியும். நடத்தையில் இது ஒரு பரந்த மற்றும் பிரசித்தி பெற்ற எண்ணக்கருவாக நோக்கப்பட்டது. இது கீழிருந்து மேல்நோக்கிய தீர்மானம் எடுத்தலையும் தேவை அடிப்படையிலான அபிவிருத்தியையும் வலியுறுத்தும் ஒரு எண்ணக்கருவாகும். மக்களுக்கு பொறுப்பு கூறக்கூடிய அரசாங்கத்தை உறுதி செய்யும் அரசியல் உத்தியாகவும் இது கருதப்படுகிறது. ஆளுகைச் செயன்முறையின் எல்லா விடயங்களியலும் ஜனநாயக விழுமியங்களைப் பின்பற்றுவது ஜனநாயக ஆட்சிமுறையின் அடிப்படையாகும்.

**ii. ஜனநாயக ஆட்சிமுறையொன்றின் பிரதான பண்புகளை விபரிக்குக. (15 புள்ளிகள்)**

இந்த கட்டமைக்கப்பட்ட வினாவில் காணப்படும் முக்கிய வார்த்தையான "விபரிக்குக" என்பது ஜனநாயக ஆட்சி செயன்முறையின் முக்கிய பண்புகள் மற்றும் அவற்றை விபரிப்பதற்கான பரீட்சார்த்திகளின் திறனை மதிப்பிடுவதாகும்.

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

ஆட்சிமுறை என்றால் என்ன மற்றும் ஜனநாயகத்துடனான அதன் தொடர்பை சுருக்கமாக அறிமுகப்படுத்துவதன் மூலம் பரீட்சார்த்தி தனது விடையைத் தொடங்கலாம் (அறிமுகத்திற்கு 2 புள்ளிகள் பரிந்துரைக்கப்படுகிறது, புள்ளி வழங்கும் பரீட்சகர்கள் அறிமுகத்தைத் தேடக்கூடாது. அவர்களின் பணி ஆட்சி முறைக்கும் ஜனநாயகத்துக்கும் இடையே காணப்படும் தொடர்பு பற்றிய கருத்து இருக்கிறதா என்று தீர்மானித்து புள்ளி வழங்குதல் ஆகும்).

**உள்ளடக்கம் (12 புள்ளிகள்)**

ஆட்சிமுறை என்பது சட்டம் மற்றும் ஒழுங்கை நிர்வகிக்கும் அதேசமயம் அனைத்து பிரஜைகளின் பொது நலனுக்காகவும் ஒரு சமுதாயத்தை நிர்வகிப்பதை உள்ளடக்குகிறது. இந்த ஆட்சி செயன்முறை பின்வரும் பணிகளைக் கொண்டுள்ளது:

1. சட்டங்களை உருவாக்குதல்: சமூகத்தின் நல்வாழ்வுக்குத் தேவையான சட்டங்களை உருவாக்குதல், மோதல் முகாமைத்துவம், சட்டம் ஒழுங்கைப் பேணுதல், சமூகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார திசைகளை வடிவமைத்தல்.
2. கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம்: இந்தப் பணிகளின் மூலம், சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம், அதன் பிரஜைகளின் நலன் மற்றும் சமூக-பொருளாதார மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட கொள்கைகளை அரசாங்கங்கள் உருவாக்கி அமுல்படுத்துகின்றன.



CamScanner

3. அரசாங்கத்திற்கு அதன் கொள்கைகளை உருவாக்கி அமுல்படுத்த பொதுத்துறை நிர்வாக நிறுவனக் கட்டமைப்பு அவசியமாகக் காணப்படுகின்றது.
4. சட்டம் மற்றும் ஒழுங்கை நிர்வகித்தல்: பிரஜைகளுக்கு பாதுகாப்பை வழங்குவதற்காகவும் சமூக ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்காகவும் சட்டம் மற்றும் ஒழுங்கை நிர்வகிக்கின்றது.
5. சமூக குழுக்களுக்கிடையிலும் மற்றும் சமூக குழுக்களுக்கும் அரசுகளுக்கும் இடையேயும் மோதலை முகாமை செய்கின்றது. அதேபோன்று அரசுகளுக்கிடையிலான உறவுகளையும் முகாமை செய்கின்றது.

எனவே அரசாங்கத்தின் மேற்கூறிய பணியைச் செய்வதில் ஜனநாயகத்தின் செல்வாக்கின் கீழ் பின்வரும் ஜனநாயக மூலக் கூறுகள் ஆட்சிச் செயன்முறையில் இணைக்கப்பட்டுள்ளன.

1. அரசியலமைப்புவாதம்
2. மக்கள் இறைமை
3. அதிகார வேறாக்கம்
4. தடைகள் மற்றும் சமன்பாடுகள்
5. சட்டத்தின் ஆட்சி
6. மனித உரிமைகள்
7. வரையறுக்கப்பட்ட அரசு
8. நிபந்தனையுடன் கூடிய நம்பிக்கை
9. வரையறுக்கப்பட்ட பதவிக் காலம்
10. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்
11. மக்களுக்கு பொறுப்புக்கூறல் + ஊடக சுதந்திரம்

(பரீட்சகர்கள் மேற்குறிப்பிட்ட எல்லா விடயங்களும் விடையில் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. பரீட்சார்த்திகள் மேற்குறிப்பிட்ட இந்த அம்சங்களைப் பற்றி முழுமையாக விளங்கிக்கொண்டிருந்தால் முழுமையான புள்ளிகளை வழங்கலாம்)

**முடிவுரை (01 புள்ளி)**

பரீட்சார்த்திகள் இந்த அம்சங்களை ஜனநாயக ஆட்சி முறையுடன் இணைத்து முடிவுரை எழுதியிருந்தால் புள்ளி வழங்குக).

CS CamScanner

## பகுதி- II

**04. (1) இலங்கையில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை விபரிக்குக? (10 புள்ளிகள்)**

**நோக்கம்:** இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பாக பரீட்சாத்திகளின் அறிவினை மதிப்பிட இவ்வினா முற்படுகின்றது. அந்தவகையில், பரீட்சார்த்திகள் அடிப்படை உரிமைகள், அவற்றின் முக்கியத்துவம், அவை மீதான மட்டுப்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக விபரிக்க வேண்டும். அடிப்படை உரிமைகளின் மட்டுப்பாடுகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக விமர்சன ரீதியான பார்வையினை முன்வைக்கும் மாணவர்களுக்கு அதிக புள்ளிகளை வழங்க வேண்டும்.

**அறிமுகம்:** அறிமுகத்தில் பரீட்சாத்திகள் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புடன் ஒப்பிடும்போது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை கொண்டுள்ளது எனக் குறிப்பிடலாம் **(01 புள்ளிகள்).**

**உள்ளடக்கம் (8 புள்ளிகள்)** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மூன்றாம் அத்தியாயத்தில் 10- 16 ஆம் உறுப்புரைகள் அடிப்படை உரிமைகள் தொடர்பாக குறிப்பிடுகின்றன. பரீட்சாத்திகள் அடிப்படை உரிமைகளை முழுமையாக முன்வைக்க வேண்டும்.

- சிந்தனை, மனசாட்சி மற்றும் மதத்துக்கான சுதந்திரம் ( உறுப்புரை 10)
- சித்திரவதை, இழிவான மற்றும் மனிதாபிமானமற்ற கவனிப்பு மற்றும் தண்டனைகளில் இருந்து சுதந்திரம் (உறுப்புரை 11)
- சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சம பாதுகாப்பு (உறுப்புரை 12). இது சமத்துவம், பாகுபாடு காட்டாமை போன்ற உரிமைகளை உத்தரவாதம் செய்கின்றது. இவ்வுறுப்புரை எந்த ஒரு பிரஜையும் இனம், மதம், மொழி, சாதி பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் மற்றும் ஏனைய எந்த அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்படக்கூடாது என குறிப்பிடுகின்றது.
- ஏதேச்சையாக கைது செய்வதிலிருந்து சுதந்திரம் மற்றும் சட்ட ரீதியான செயன்முறைக்கான உரிமையை உறுதி செய்கின்றது (உறுப்புரை 13)
- பேச்சு, கருத்து வெளியீடு, ஒன்று சேர்தல், ஒன்று கூடுதல், மத சுதந்திரம், மொழி, நாட்டுக்கு மீண்டும் திரும்பி வருதல், தாம் விரும்பிய இடத்தில் வசித்தல் போன்ற உரிமையை மற்றும் சுதந்திரத்தினை உறுதி செய்துள்ளது (உறுப்புரை 14)

உறுப்புரை 10, 11, 12(1), 12(3), 13 என்பன சகல தனி நபர்களுக்கும் உரித்தானது. உறுப்புரை 12(2) மற்றும் 14 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் இலங்கை பிரஜைகளுக்கு மட்டுமே உரித்தாகும். இதனால், அப்போது பிரஜாவுரிமையற்று இருந்த இந்திய தமிழர்களுக்கு இவ் உரிமையினை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. 2001 ஆம் ஆண்டு வரை இந்நிலைமை தொடர்ந்தது. மேலும் உறுப்புரை 10 மற்றும் 11 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் தனி முதன்மையான உரிமைகள் ஆகும். ஆகவே, அவ்வுரிமைகள் எந்தவொரு கட்டுப்பாட்டுக்கோ அல்லது மட்டுப்பாட்டுக்கோ உட்படுத்த முடியாது. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புடன் ஒப்பிடும்போது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உரிமை மீறலுக்கான சட்டக்காப்பீடு வழங்கப்பட்டுள்ளமை ஒரு முன்னேற்றகரமான விடயமாகும்.



CamScanner

அரசு அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக உறுப்புரை 15 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, கருத்து வெளியீட்டு சுதந்திரத்தினை கட்டுப்படுத்தும் போது சட்டத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்பவே மேற்கொள்ள வேண்டும். அந்தவகையில், இனம் மற்றும் மத ஒற்றுமை, பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் தொடர்பான விடயங்கள், நீதிமன்றத்தினை அவமதித்தல் அல்லது அவதூறு செய்தல், குற்றத்தினை தூண்டுதல் போன்ற காரணங்களுக்காக இவ்வுரிமைகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும் 15வது உறுப்புரை குறிப்பிடுவதானது 14ஆம் உறுப்புரையில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை சுதந்திரத்தினை பின்வரும் அடிப்படைகளில் கட்டுப்படுத்த முடியும் என்பதனையாகும். அவை தேசிய பாதுகாப்பு, பொது சுகாதாரம், ஒழுக்கம் மற்றும் 1947 ஆம் ஆண்டு பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் அவசரகால ஒழுங்கு விதிகளினால் அடிப்படை சுதந்திரங்களை கட்டுப்படுத்த முடியும். அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் 16ஆம் உறுப்புரை, உச்ச நீதிமன்றத்தில் சட்டப் பரிகாரம் பெறும் வழிமுறைகள் தொடர்பாக குறிப்பிடுகின்றது.

பின்வருவனவற்றினை பரீட்சாத்திகள் குறைபாடுகளாக குறிப்பிடலாம். உயிர் வாழ்வதற்கான உரிமை தொடர்பாக எங்கும் வெளிப்படையாக குறிப்பிடப்படாமை, சொத்துரிமை தொடர்பாக குறிப்பிடப்படாமை, சமூக உரிமைகளாக கல்வி, சுகாதாரம், வீடு தொடர்பாக குறிப்பிடப்படாமை. குழு உரிமைகள் (பெண்கள்/ சிறுவர்கள்/ சிறுபான்மையினர்) தொடர்பாக குறிப்பிடப்படாமை.

சில பரீட்சாத்திகள் தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டமையினையும் குறிப்பிடலாம். அது 19 வது திருத்தத்தின் விளைவாகும்.

மேற்கூறியவாறு விடை எழுதப்பட்டிருந்தால் முழுமையான புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்.

**முடிவுரை:** பரீட்சார்த்திகள் அரசாங்கத்தின் சட்டங்கள், குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், நிகழ்நிலை காப்புச்சட்டம் என்பன எவ்வாறு அடிப்படை உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக அல்லது சவாலாக அமைந்துள்ளன என்பது குறித்தும் குறிப்பிட முடியும். (01 புள்ளி)

**04) II) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் உச்ச நீதி மன்றத்தின் வகிபங்கினை விளக்குக? (10 புள்ளிகள்)**

**நோக்கம்:** இவ்வினா கலந்துரையாடல் என்ற விடயத்தினை வலியுறுத்துகின்றது. பரீட்சாத்திகள் ஏதேனும் ஒரு விடயத்தினை கலந்துரையாடும் போது அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை வெளிப்படுத்துவர்.

**அறிமுகம்:** உரிமை-மைய அரசியல் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதில் நீதித்துறையின் முக்கியத்துவத்தினை அறிமுகத்தில் குறிப்பிட முடியும். ஜனநாயக நாடுகளில் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறைக்கு முக்கிய பங்குண்டு. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் விசேட பண்பு யாதெனில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் அது தொடர்பான சட்டப் பரிகாரம் பெறும் ஏற்பாடுகள் உள்வாங்கப்பட்டவையாகும். (01 புள்ளிகள்)

**உள்ளடக்கம்: (8 புள்ளிகள்)** உறுப்புரை 126 அடிப்படை உரிமை மீறலுக்கான பரிகாரம் தொடர்பாக குறிப்பிடுகின்றது. இவ்வேற்பாடு 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பில் காணப்படவில்லை. அந்த வகையில் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அடிப்படை நீதி நிறுவனமாக உச்சநீதிமன்றம் காணப்படுகிறது. உச்ச நீதிமன்றத்தில் மாத்திரமே பிரஜைகள் அடிப்படை



CamScanner

உரிமை மீறலுக்கான சட்டப் பரிகாரத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்பதனைப் பரீட்சாத்திகள் குறிப்பிட வேண்டும்.

அரசியலமைப்பின்படி நபர் . ஒருவர் நிறைவேற்றதிகார அல்லது நிர்வாகச் செயற்பாட்டினால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டால் அல்லது மீறப்படுவதற்கான வாய்ப்புகள் / ஆபத்து நிலவினால் உச்ச நீதிமன்றத்தினை நாடி சட்டப் பரிகாரம் மற்றும் நட்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அடிப்படை உரிமை மீறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உச்சநீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் முறைபாட்டினைச் செய்ய வேண்டும். ஒரு தனி நபரின் உரிமை மீறப்பட்டால் ஒரு மூன்றாம் தரப்பு நபர் ஒருவர் 30 நாட்களுக்குள் வழக்குத்தாக்கல் செய்ய முடியாது. அதன்படி, இரண்டு நீதியரசர்களைக் கொண்ட உச்ச நீதிமன்ற குழு அம்மனுவினை விசாரணை செய்வதா? இல்லையா? என்பது தொடர்பான முடிவினை எடுக்கும்.

உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டால், அவை தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதத்துக்குள் தீர்ப்பு வழங்கப்படும். 126 ஆவது உறுப்புரைக்கமைய உச்ச நீதிமன்றம் உரிமை மீறப்பட்டுள்ளதா? அல்லது உரிமை மீறப்படுவதற்கான ஆபத்து உள்ளதா? என்பது தொடர்பான தீர்மானத்தினை எடுக்கும்.

பரீட்சாத்திகள் அடிப்படை உரிமை மீறல் வழக்கினை தொடர்வதில் அல்லது சட்ட பரிகாரத்தினை பெற்றுக் கொள்வதில் காணப்படும் சவால்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

1. அடிப்படை உரிமைகள் வழக்குத் தொடர்வதில் உள்ள கால வரையறை

2. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வது செலவு மிக்க விடயம். ஆகவே சாதாரண மக்கள் வழக்கு தொடர்வதில் நிதிப் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர்.

3. நீதிமன்ற செயன்முறையில் நீண்ட கால தாமதம் காணப்படுகிறது. சில வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்க பல வருடங்கள் எடுக்கின்றன.

4. நீதிமன்ற செயல்முறைகளில் காணப்படுகின்ற அரசியல் தலையீடுகள்.

5. பின்தங்கிய பிரதேசங்களில் வாழுகின்ற மக்களுக்கு உச்ச நீதிமன்றத்தினை அணுகுவது கடினமாக உள்ளது.

06. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பான விழிப்புணர்வு சாதாரண மக்கள் மத்தியில் இல்லாமை அல்லது குறைவான உள்ளமை.

07. உச்ச நீதிமன்றத்தில் நிலவும் குறைந்த அளவிலான ஆளணி, நிறுவன மற்றும் ஏனைய வளங்கள்.

சில பரீட்சாத்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அப்பால் சென்று உச்ச நீதிமன்றம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படுகின்ற சட்டங்களின் அரசியலமைப்பு தன்மையினை பரிசீலனை செய்கின்றது. அத்துடன் மேல்முறையீட்டு நீதிமன்றம் சில வழக்குகளை இறுதித் தீர்ப்புக்காக உச்ச நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கின்றது. இவற்றில் பெரும்பாலானவை அடிப்படை உரிமைகளுடன் தொடர்புடையவை. உச்சநீதிமன்றம் அது தொடர்பான விடயங்களை பரிசீலனை செய்து வியாக்கியானம் வழங்குவதுடன் பொருத்தமான தீர்ப்புகளை வழங்கவும் கடப்பட்டுள்ளது என்று விளக்க...



CamScanner

**முடிவுரை (1 புள்ளி):** முடிவாக பரீட்சாத்திகள் உச்ச நீதிமன்றம் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துப் பலப்படுத்துவதில் கொண்டுள்ள அர்ப்பணிப்பு மற்றும் அதன் விளைவுகள் என்பன தொடர்பாக கடந்த கால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு தமது அவதானிப்பினைக் குறிப்பிடலாம். அத்துடன், அண்மைக்காலங்களில் உச்ச நீதிமன்றம் அடிப்படை உரிமைமீறல் வழக்குகள் தொடர்பாக வழங்கிய சாதகமான தீர்ப்புகள் குறித்தும் குறிப்பிடலாம். அதில் நிகழ்நிலை காப்புச்சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், உள்ளூராட்சி தேர்தலை காலம் தாழ்த்தியமை தொடர்பான தீர்ப்பு, ராஜபக்ச குடும்பத்தினர் இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியமை தொடர்பான தீர்ப்பு என்பன அடங்கலாம். அடிப்படை உரிமை மீறல்களுக்கு உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தரப்பினை இழப்பீடு வழங்குமாறு கோரும் என்ற புரிதலும் பரீட்சாத்திகளுக்கு அவசியம்.

**05) "இலங்கையில் காலணித்து அரசு சில எதிர்பாராத சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது" நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களை தருக.**

**நோக்கம்:** இவ்வினா காலணித்துவ காலத்தில், குறிப்பாக 1833-1947 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத சாதகமான மாற்றங்களை அடையாளம் கண்டு தர்க்க ரீதியாக பகுப்பாய்வு செய்யும் திறனை மதிப்பிட முற்படுகின்றது.

**அறிமுகம்:** காலனித்துவ அரசு ஏகாதிபத்திய நலனை பேணியதுடன், ஆசியாவில் பிரித்தானியரின் உடைமைகளுக்கு பாதுகாப்பு வழங்கி நாட்டில் பிரித்தானிய முதலீட்டாளர்களைக் கவரும் சாதகமான சூழ்நிலையினை உருவாக்க வசதியளித்தது. இவ்விரு நோக்கங்களையும் அடையும் வகையில் இலங்கையில் பல அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் அவற்றின் விளைவுகள் முற்றிலும் அவர்கள் எதிர்பார்த்தது போல் அமையவில்லை. அவை பல எதிர்க்கனிய மற்றும் நேர்க்கனிய விளைவுகளுக்கு வித்திட்டன. அந்தவகையில், இவ்வினாவுக்கான விடையானது எதிர்பாராத சாதக விளைவுகளை அடையாளம் காண்பதாக அமைய வேண்டும். **(03 புள்ளிகள்)**

**உள்ளடக்கம் (15 புள்ளிகள்):** ஒரு குறிப்பிடத்தக்க எதிர்பாராத சாதக விளைவு யாதெனில் உள்ளூர் முதலாளித்துவ வகுப்பொன்று எழுச்சி பெற்றமையும் அது மரபு ரீதியான முதலியார் (முதலாளித்துவ) (நிலபிரபுத்துவ) வகுப்பினை தளர்ச்சியடையச் செய்தமையுமாகும். புதிய வகுப்பினர் மதுபான விற்பனை, தொழில் முயற்சி, போக்குவரத்து ஒப்பந்தங்கள், சிறு வியாபாரம் என்பவற்றின் ஊடாக மூலதனத்தைச் சேர்த்தனர். இவ் முதலாளித்துவ வகுப்பில் உருவான உயர் குழாமினர் தமது செல்வத்தினை சமூக சேவை, கல்வி, கலாச்சார மற்றும் மத விடயங்களில் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக செலவு செய்தனர். (i)

இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை சமூக நிலை மாற்றத்திற்கு வித்திட்டது. அதன் மூலம் சந்தைக்கு அவசியமான சுதந்திர ஊழியப்படை கிடைக்கப்பெற்றது. மேலும் சட்டத் திருத்தங்களின் காரணமாக தனிமனிதத்துவம், தனிமனித உரிமைகள் மற்றும் ஆங்கில கல்வி என்பன சமூக நகர்வில் பெரியளவில் பங்களிப்பு செய்தன. இவையனைத்தும் சமூக மற்றும் கலாச்சார பரப்புகளில் சீர்திருத்தங்களுக்கு வித்திட்டன. (ii)

சமூக நிலைமாற்றமானது இலங்கை சமூகத்தில் சமத்துவம் மற்றும் ஜனநாயக அபிலாசைகள் உருவாகுவதற்கு வித்திட்டன. அதற்கு 1833 ஆம் ஆண்டு கோல்புரூக் கமரன் சீர்திருத்தங்கள் ஊடாக நீதித்துறை மறுசீரமைக்கப்பட்டமையும் அதனூடாக சிவில் உரிமைகள் வளர்ச்சியடைந்தமையும் (iii)



CamScanner

காரணமாய் அமைந்தது. சிவில் உரிமைகள் வளர்ச்சியடைந்தமையானது ஒரு திறந்த சமூகத்திற்கு மாத்திரமன்றி முதலாளித்து பொருளாதார செயற்பாடுகள் மற்றும் சமூக இயக்கங்கள் என்பன உருவாகுவதற்கும் வழி செய்தன.

முதலாளித்துவ வகுப்பு ஆங்கிலக் கல்வி கற்ற மேற்கத்தேயே மயமாகிய மத்திய தர வர்க்கம் ஒன்றின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது. அம் மத்தியதர வர்க்கம் சீர்திருத்தங்களை கோரி செயற்பட்ட பல சமூக இயக்கங்கள், குறிப்பாக மதச் சீர்திருத்த இயக்கங்கள், அரசியலமைப்பு சீர்திருத்தம், தேசிய இயக்கம் மற்றும் இடதுசாரி இயக்கங்கள் உருவாக காரணமாய் அமைந்தன.

பேராசிரியர் குமாரி ஜயவர்தன அவர்கள் அவதானித்தது போல், இக்காலத்தில் சிங்கள சமூகத்தில் புதிதாக எழுச்சி பெற்ற உயர் குழாம் தரப்பினர், சிங்கள சமூகத்தின் ஆதிக்க மிக்க சாதியினை சேர்ந்தவர்கள் அல்ல. அது காலனித்துவ அரசு அறிமுகம் செய்த சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட மேல் நோக்கிய சமூக நகர்வு மற்றும் மரபு ரீதியான சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட நிலைமாற்றம் என்பவற்றினால் ஏற்பட்ட விளைவு என்கின்றார்.

ஆங்கிலக் கல்வியின் அறிமுகம் மற்றும் சமூக, கலாச்சார தளங்களில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள் நிலப் பிரபுத்துவக் கட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட மானிய முறை சமூகக் கட்டமைப்புக்கு பதிலாக ஒரு நவீன சமூக ஒழுங்கினை உருவாக்கியது.

காலனித்துவ காலத்தில் ஏற்பட்ட பிரிதொரு எதிர்பாராத சாதக விளைவு யாதெனில், இலங்கையில் சிவில் சமூகமொன்று உருவாகியமையாகும். இலங்கையின் சிவில் சமூகம் மத, சாதி அமைப்புகள், தொழிற் சங்கம், பெண்கள் அமைப்பு, மது ஒழிப்பு இயக்கம், தேசியத்துவ சங்கங்கள், தன்னார்வ குழுக்கள் மற்றும் அரசியல் குழுக்கள் என்ற அடிப்படையில் விரிவாக்கம் அடைந்தன.

சிவில் சமூக அமைப்புக்கள் எதிர்ப்பு இயக்கங்களாக செயல்பட்டதுடன் ஜனநாயக உரிமைகளுக்கும் குரல் கொடுத்தன. காலனித்துவ சமூக கலாச்சார மாற்றங்கள் இலங்கை சமூகத்தில் சில பிரிவினையினையும் ஏற்படுத்தின. குறிப்பாக, இப்பிரிவினை காலனித்துவ சீர்திருத்தங்களால் பயனடைந்தோர் மற்றும் பயனடையாதோர் என்றவகையில் பிரிவினையினை ஏற்பட்டது. காலனித்து சீர்திருத்தங்களால் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு செல்வத்தினை திரட்டியவர்கள் மற்றும் சிவில் சேவையில் உயர் பதவிகளை தக்கவைத்துக் கொண்டவர்களை பயனடைந்தவர்களாக குறிப்பிட முடியும். அவர்கள் காலனித்துவ கலாசாரம், விழுமியங்கள் மற்றும் வாழ்க்கை முறையினை தழுவிக் கொண்டனர். மறுபுறமாக, இவர்கள் காலனித்துவ அரசுக்கு விசுவாசமாக இருந்த வரப்பிரசாதங்களைக் கொண்ட உள்ளூர் உயர் குழாமினராக கருதப்பட்டனர்.

சீர்திருத்தங்களால் பயனடையாத பிரிவினராக ஆங்கிலக் கல்வியினைப் பெற முடியாமல், திறந்த பொருளாதார செயற்பாடுகளில் நன்மை பெற முடியாத சாதாரண மக்களைக் குறிப்பிட முடியும் இவர்கள் இனம், மத, பிரதேச அடையாளங்களுடன் மரபு ரீதியான விழுமியங்கள் மற்றும் நம்பிக்கையுடன் எழுச்சி பெற்ற சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர். காலனித்துவ அரசின் தீவிர சமூக-கலாச்சார சீர்திருத்தங்களை எதிர்த்தனர்.

இக்காலத்தில் எழுச்சிப்பெற்ற அரசியலமைப்பு சீர்திருத்த இயக்கம், இடதுசாரி இயக்கம் மற்றும் தொழிற் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் என்பன துடிப்பான சிவில் சமூக அமைப்புக்களாக காணப்பட்டதுடன், அவை ஜனநாயகத்துக்கும் சிவில் சமூக செயற்பாடுகளுக்கும் வித்திட்டன.



CamScanner

சர்வஜன வாக்குரிமை வழங்கப்படமையானது ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கும், பின்னர் அரசியல் சுதந்திரத்திற்கான அபிலாசைகள் மற்றும் கோரிக்கைகள் அதிகரிக்கவும் வழிசெய்தன. டொனமூர் அரசியலமைப்பின் கீழ் காணப்பட்ட அரசு கழகத்தில் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்பட்டது. இக்காலத்தில் அரசியல் கட்சிகள் வளர்ச்சியடையவில்லை. ஆயினும், சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டமை பிற்காலத்தில் அரசியல் கட்சிகள் வளர்ச்சியடைய பெரிதும் காரணமாக அமைந்தது (LSSP டொனமூர் காலத்தில் உருவாகியது என்பது குறிப்பிடத்தக்கது).

சர்வஜன வாக்குரிமை மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கம் என்பன சாதாரண மக்களை அரசியல் ரீதியாக சக்திப்படுத்தியது. சமூகத்தில் விளிம்பு நிலையில் மற்றும் பிற்படுத்தப்பட்ட நிலையில் வாழ்ந்த மக்கள் மத்தியில், சமூக மற்றும் இனக் குழுக்களுக்கிடையில் அரசியல் அக்கறை மற்றும் தமது விடுதலை தொடர்பான கரிசனையினை ஏற்படுத்தியது.

1931 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட சீர்திருத்தங்களின் விளைவு இலங்கையில் தோற்றம் பெற்ற சமூக நல அரசு என்பதனை குறிப்பிட வேண்டும். அரசு கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் போட்டிப் போட்டுக் கொண்டு மக்களுக்கான சேம நலத்திட்டங்களை ஆரம்பித்தார்கள். அதில் அரசியல் ஆதரவினைத் திரட்டுதல் மற்றும் தக்கவைத்தல் ஆகிய அரசியல் நோக்கங்களும் காணப்பட்டன. இதன் விளைவாக சமூக உரிமைகளான கல்விக்கான உரிமையை, சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன வளர்ச்சியடைந்தன.

**முடிவுரை (2 புள்ளிகள்):**

முடிவுரையில் காலனித்துவ அரசின் சீர்திருத்தங்கள் எவ்வாறு எதிர்பாராத விளைவுகளை சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார பரப்புகளில் ஏற்படுத்தின என்பதை குறிப்பிட வேண்டும். இத்தகைய எதிர்பாராத விளைவுகள் காலனித்துவ அரசின் விரிவாக்கத்துக்கும் காரணமாக அமைந்தது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொண்டமையானது 1833-1947 வரையில் இடம்பெற்ற காலனித்துவ சீர்திருத்தங்களின் எதிர்பார்த்த மற்றும் எதிர்பாராத விளைவுகளின் இறுதி விளைவு என்பதனை குறிப்பிடலாம்.

**6. இலங்கையின் அரசியல் கட்சி முறைமை தொடர்பாக கட்டுரையொன்றினை எழுதுக.**

**நோக்கம்::** இவ்வினா பரிட்சாத்திகளின் அறிவு, திறன் மற்றும் எண்ணப்பாங்கினை மதிப்பீடு செய்ய முற்படுகின்றது. இவ்வினாவிற்கு பரீட்சார்த்திகள் பல்வேறுப்பட்ட விடயங்களை முன்வைக்க முடியும். ஆகவே உள்ளடக்கத்தினை அவதானித்து பொருத்தமான புள்ளிகளை வழங்கவும்.

**அறிமுகம் (3 புள்ளிகள்):** அறிமுகத்தில் அரசியல் கட்சிகளுக்கும் கட்சி முறைமைக்கும் இடையிலான வேறுப்பாட்டினை குறிப்பிட வேண்டும். அரசியல் கட்சிகள் என்பது தனிநபர்களை கொண்ட, அதிகாரத்தினைக் கைப்பற்றும் நோக்குடன் ஒழுங்கமைந்த ஒரு குழுவாகும். இவை ஜனநாயக நாடுகளில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் முக்கிய கூறாகக் காணப்படுகின்றது. அரசியல் கட்சிகள் பகிரப்பட்ட சிந்தனைகள் மற்றும் கருத்தியல்கள் என்பவற்றினைக் கொண்டு செயற்படும். அவை அரசியல் கட்சிகளுக்கே உரிய ஒழுங்கமைப்பினையும் ஆதரவாளர்களையும் கொண்டிருக்கும். அரசாங்கத்தின் அதிகாரத்தினைக் கைப்பற்றுவது இவற்றின் பிரதான நோக்கமாகும்.



CS CamScanner

மறுபுறமாக, அரசியல் கட்சிமுறை என்பது பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அந்தவகையில் ஆதரவுத்தளம், அரசாங்கத்தினை உருவாக்க, அதிகாரத்தினைக் கைப்பற்ற இயலுமைக் கொண்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை, இயங்கு நிலை என்பன உள்ளடங்கும். இதில் தனிக் கட்சிமுறை (சீனா), இரு கட்சிமுறை, இரு கூட்டு கட்சிமுறை (இரு பிரதான ஆதிக்கக் கட்சிகள் ஏனைய சிறிய/சிறுபான்மைக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்தல்) மற்றும் பல கட்சிமுறை என்பன அடங்கும்.

**உள்ளடக்கம் (15 புள்ளிகள்):**

இலங்கையின் அரசியல் கட்சி முறையினை இலங்கையின் ஆய்வாளர்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்கள்.

01. இரு கட்சி முறை: இரு பிரதானக் கட்சிகள் அதிகாரத்தினைக் கைப்பற்ற போட்டியிடுதல்.
02. பல கட்சிமுறை: பல கட்சிகள் அதிகாரத்தினை கைப்பற்ற போட்டியிடுதல்
03. இரு கட்சி கூட்டு முறை/ இரு கூட்டு கட்சிமுறை: இரண்டு பிரதான கட்சிகள் காணப்படும். ஆயினும், இவை தனித்து அதிகாரத்தினை கைப்பற்ற முடியாது. ஆகவே சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகளுடன் சேர்ந்து அதிகாரத்தினைக் கைப்பற்றி அரசாங்கத்தில் பங்குப்பற்றுதல்.

இலங்கையின் அரசியல் கட்சி முறையினை காலக்கட்ட அடிப்படையில் பின்வருமாறு நோக்கலாம்.

1947 – 1956: ஒரு கட்சி முறை நிலவியக் காலம். ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே அதிகாரத்தினைக் கைப்பற்றி ஆட்சியமைத்தது. ஆயினும் 1951ம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தாபிக்கப்பட்டப் பின்னர் இந்நிலைமை மாறியது. குறிப்பாக 1956ம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றியதுடன், இலங்கையின் அரசியல் கட்சி முறை புதிய வடிவத்தினைப் பெற்றது. அதுவரை ஆதிக்கம் செலுத்திய ஐக்கிய தேசியக் கட்சி செல்வாக்கிழந்து அவ்விடத்தினை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக் கைப்பற்றியது. இதற்கு SWRD பண்டாரநாயக்க அவர்கள் சிங்கள – பௌத்த கோரிக்கையினையும், மொழிக் கொள்கையினையும் முன்வைத்து பிரச்சாரம் செய்தமை முக்கிய காரணமாக அமைந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் கிடைக்கப் பெறாமையினால் SWRD பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியினை, குறிப்பாக இடதுசாரி சித்தாந்தங்களைக் அடிப்படையாகக் கொண்டு, சமூகத்தில் அடிமட்ட வகுப்பினரை இணைத்துக் கொண்டு உருவாக்கினார். இது அரசியல் கட்சி முறையின் புதிய போக்கினை எடுத்துக் காட்டியது.

பின்னர் 1956 தொடக்கம் 1965 வரையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தினை அமைத்தது. இது இரு கட்சி முறையினை வெளிப்படுத்தியதுடன், இரு கூட்டுக் கட்சி முறையின் ஆரம்பத்தினையும் சுட்டிக் காட்டியது. ஏனெனில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனித்து தேர்தலில் போட்டியிடாமல் இடதுசாரி கட்சிகளுடன் (LSSP மற்றும் CP) கூட்டு சேர்ந்து போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெற்றது. இக்காலப்பகுதியில் இலங்கையின் அரசியல் கட்சி முறையில் வெளிப்பட்ட மற்றொரு விடயம் யாதெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இடதுசாரிகளுடன் கூட்டு சேர்ந்தாகும். 1956ம் ஆண்டு தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி என்றப் பெயரில் கூட்டணியினை உருவாக்கி போட்டியிட்டது. 1965ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றியதுடன் சமஷ்டி கட்சியினையும் ஏனைய சில வலதுசாரி கட்சிகளையும்



CamScanner

இணைத்துக் கொண்டு தேசிய அரசாங்கத்தினை உருவாக்கியது. இதுவே, இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது தேசிய அரசாங்கமாகும்.

1970ம் ஆண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் ஒரு முறை இடதுசாரிக் கட்சிகளை கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஐக்கிய முன்னணி என்றப் பெயரில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றதுடன் 1972 இல் புதிய அரசியலமைப்பினையும் உருவாக்கியது.

1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் போட்டியிட்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையினைப் பெற்று தேர்தலில் அமோக வெற்றியினைப் பெற்றது. இதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மூடிய பொருளாதாரக் கொள்கை, நாட்டில் நிலவிய பஞ்சம் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்தின. 1977ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி செய்தது.

உண்மையில் 1977ம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் அரசியல் கட்சி முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றினைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- ✓ விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செயயப்பட்டமை அரசியல் கட்சிமுறையில் தாக்கம் செலுத்தியது. (கட்சி பிளவுகள்/புதிய கட்சிகளின் தோற்றம்)
- ✓ 1977ம் ஆண்டுத் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் படுதோல்வியடைந்தன. அதன் பின்னர் 1994ம் ஆண்டு ஒரு ஆசனம் கிடைத்தது. பின்னர் 1989களில் JVP உருவாகியப் பின்னர் இந்நிலை மாறியது. JVP 2000, 2001, 2005 ஆகிய பொதுத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்க ஆதரவினைப் பெற்றது.
- ✓ ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்வது மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி வலதுசாரிகளுடன் கூட்டு சேர்வது என்ற போக்கு 1977க்கு பின்னர் மாறியது.
- ✓ அதிக எண்ணிக்கையிலான சிறிய கட்சிகள் (JHU), சிறுபான்மைக் கட்சிகள் (SLMC/UPF), இனத்துவக் கட்சிகள், பிரதேசக் கட்சிகள் தோற்றம் பெற்றன.
- ✓ பல புதியக் கூட்டணிகள் உருவாக்கப்பட்டமை - ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி, தேசிய மக்கள் சக்தி (NPP) என்பவற்றினைக் குறிப்பிடலாம்.

1994-2005 வரையில் சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களின் தலைமையிலான SLFP அரசாங்கம் ஆட்சியில் இருந்தது. சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் பல இவ்வரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்தன. இக்கூட்டணி பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் அரசியல் கட்சி முறையில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படவில்லை.

2005 தொடக்கம் 2014 வரை மகிந்த ராஜபக்சவின் ஆட்சி நிலவியது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்றப் பெயரில் கூட்டணி உருவாக்கப்பட்டு சிறிய மற்றும் சிறுபான்மை (வலது சாரி மற்றும் இடதுசாரி உள்ளிட்ட) கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்தன. இக்காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி (பிரதான எதிர்க்கட்சி) மிகவும் பலவினமானதாக காணப்பட்டது. ஐ.தே. கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டதுடன், அதிக எண்ணிக்கையிலானோர் மகிந்த அரசாங்கத்தில் இணைந்தனர். அத்துடன் இக்காலத்தில் மத ரீதியான கட்சிகள் உருவாகின. அதற்கு சிங்கள பௌத்த பெரும்பான்மைவாதத்தினை மகிந்த அரசாங்கம்



CamScanner

ஊக்குவித்தமை ஒரு காரணமாகும். அத்துடன் இக்காலத்தில் சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளில் பெரியளவிலான பிளவுகளும் அதனால் புதிய கட்சிகளும் தோற்றம் பெற்றன.

இவற்றுக்கப்பால், 2015ம் ஆண்டு அரசியல் கட்சி முறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியப் பின்பு புதியதொரு அரசியல் கலாசாரம் உருவாகியது. அதாவது இரண்டு பிரதான எதிரணி கட்சிகள் ஒன்று சேர்ந்து (ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி) தேசிய அரசாங்கம் ஒன்றினை உருவாக்கினார்கள். அமைச்சுப் பதவிகளை இவ்விரு கட்சிகளும் பகிர்ந்துக் கொண்டன. இது ஒரு புதிய அரசியல் கலாசாரமாக காணப்பட்டது. ஆயினும், பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஏற்பட்ட ஆளுமை போட்டிகள் மற்றும் வகுப்புச் சார்ந்த முரண்பாடுகள் யாவுமே தேசிய அரசாங்கத்தின் தொடர்ச்சியினைக் கேள்விக்குறியாக்கின. 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் இரு கட்சிகளுக்கிடையிலான மோதலை தீவிரப்படுத்தின. பின்னர் ஐக்கிய தேசிய கட்சி மாத்திரமே அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகியது.

2016ம் ஆண்டு புதியதொரு அரசியல் கட்சி உருவாக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தப் பின்னர் உருவாக்கப்பட்டது. இது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP) என்றப் பெயரில் உருவாக்கப்பட்டது. இது தீவிர சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனையினைக் கொண்ட கட்சியாக அமைந்ததுடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் சிங்கள மக்கள் மத்தியில் பெரியளவிலான ஆதரவினைப் பெற்றது. 2018ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் கணிசமான ஆசனங்களைப் பெற்றது. அத்துடன் 2019ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றியினைப் பெற்றது.

இப்பின்புலத்திலேயே 2020ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு கட்சிப் பிளவுகளும் புதிய கட்சிகளும் உருவாகின. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலானோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இணைந்தனர். மறுபுறமாக, ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து பிரிந்து சஜித் பிரேமதாச தலைமையிலான குழுவினர் ஐக்கிய மக்கள் சக்தி (SJB) என்ற புதிய கட்சியினை உருவாக்கினர். 2020ம் அண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தல் இலங்கையின் அரசியல் கட்சி முறையில் இன்னொரு விடயத்தினை எடுத்துக்காட்டியது. சுதந்திரம் பெற்றக்காலத்தில் இருந்து அதிகாரப் பீடத்தில் இருந்த இரு பிரதான மரபு ரீதியான கட்சிகள் மக்கள் ஆதரவினை இழந்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி 20க்கும் குறைவான ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தினைக் கூட பெற முடியாத நிலை உருவாகியது. இது இலங்கையின் அரசியல் கட்சி முறையில் புதிய பாங்காக அமைந்தது.

பின்னர் 120 நாட்கள் இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் (அரகலயப்) போராட்டம் சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவினைப் பெற்று வந்த கோடபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினை பதவி விலகச் செய்தது. அதன் பின்னர் ரணில் விக்ரமசிங்க பிரதமராகவும், பின்னர் பாராளுமன்றம் தெரிவுச் செய்த ஜனாதிபதியாகவும் பதவியேற்றார். பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தினை (தேசியப் பட்டியலினூடாக) பெற்றக் கட்சியின் தலைவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை பெரும் ஆச்சரியமாகவே அமைந்தது. இன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஆட்சி நடாத்தி வருகின்றார். இதுவும் இலங்கையின் அரசியல் கட்சி முறையின் புதிய வடிவமாகும்.

இன்று காடர் கட்சியாக JVP காணப்படுகின்றது. அக்கட்சி சில காலங்களில் எழுச்சியடைந்ததுடன் பின்னர் வீழ்ச்சியடைந்ததும் ஒரு பொதுவான பண்பாகக் காணப்படுகின்றது.

மேற்கூறிய காரணிகள் புலப்படுத்தும் விடயம் யாதெனில் இலங்கையின் அரசியல் கட்சி முறையில் தொடர்ந்தும் இரண்டு பிரதான கட்சிகளின் ஆதிக்கத்தினை செலுத்துகின்றமையாகும். இன்று ஆதிக்கம் மிக்க கட்சிகளாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்பன காணப்படுகின்றன. இந்நிலை எதிர்வரும் காலங்களில் மாற்றமடையலாம். அந்தவகையில் இரண்டு பிரதான கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கும் போக்கு 1956ம் ஆண்டு ஆரம்பித்து இன்றுவரை தொடர்கின்றது.

அண்மைக்காலங்களில் அவதானிக்கக்கூடிய பிறிதொரு விடயம் யாதெனில் கட்சிக்குள் இடம்பெறும் பிளவுகள் - இவை தனிப்பட்ட கருத்தியல், ஆளுமை ரீதியான மோதல், வகுப்பு ரீதியிலான வேறுபாடுகள், தனிப்பட்ட அரசியல் அபிலாசைகள் போன்ற பல காரணிகளால் தூண்டப்படுகின்றன. இதனைப் பிரதான கட்சிகள், இடதுசாரி கட்சிகள், சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் என்பவற்றில் காண முடியும். அண்மைக் காலங்களில் முஸ்லிம், வட-கிழக்கு மற்றும் மலையக அரசியல் கட்சிகளில் அதிகளவிலான பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையின் எந்தவொரு அரசியல் கட்சியிலும் உட்கட்சி ஜனநாயகத்தினை காண முடியாதுள்ளது.

சிறுபான்மை அரசியல் கட்சிகள் உருவாவதற்கு நாட்டின் அரசியல் சூழல், இனவன்முறைகள், கருத்தியல்கள், மனித உரிமை மீறல்கள், சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் போன்ற பல காரணிகள் செல்வாக்கு செலுத்தி வந்துள்ளன.

**முடிவுரை (2 புள்ளிகள்)**

பரிட்சாத்திகள் மேற்கூறிய விடயங்களை தொகுத்து முடிவுரையொன்றினை எழுதலாம். 20 புள்ளிக்கான வினா என்பதனால் முடிவுரை அவசியமாகும். இலங்கையின் அரசியல் கட்சி முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு இன, மத, பிரதேசச, கருத்தியல் ரீதியிலான காரணிகளுடன், தேர்தல் முறை, நாட்டின் அரசியல் சூழல், அரசியல் கலாசாரம், வாக்காளர் நடத்தை, சிவில் யுத்தம் மற்றும் அரசியல் கட்சிகளில் காணப்படும் குறைந்தளவிலான ஜனநாயகம், வெளிப்படைத்தன்மையின்மை, தலைமைத்துவ ஆதிக்கம் என்பனவும் காரணமாகும் என்பதனை குறிப்பிட்டால் அது ஒரு சிறந்த முடிவுரையாக அமையும்.



CamScanner

7 (i) இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் ஓம்புட்ஸ்மனின் (நிர்வாக விவகாரங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளர்) அதிகாரங்கள் மற்றும் பணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக (5 புள்ளிகள்).

**வினாவின் நோக்கம்:** இந்த வினாவின் நோக்கமானது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையில் ஓம்புட்ஸ்மனின் அதிகார எல்லை மற்றும் பிரதான பணிகள் என்பவற்றையும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அவர் எதிர்கொள்ளும் பிரதான சவால்கள் தொடர்பாகவும் சுருக்கமாக விபரிக்க பரீட்சாத்திக்குள்ள ஆற்றலை மதிப்பீடு செய்வதாகும்.

ஓம்புட்ஸ்மன் பதவி நிலை அறிமுகம் செய்ததன் பின்னணியில் குடிமக்களின் மனித உரிமைகளுக்கான கண்காணிப்பாளரான இருத்தல் வேண்டும் என்ற கருத்துநிலை காணப்பட்டது. பொதுத்துறை நிர்வாகத்தில் நல்லாட்சியை மேம்படுத்துவதிலும் ஓம்புட்ஸ்மனின் வகிபங்கு உள்ளது என்பதும் நோக்கத்தக்கது.

நிர்வாகச் செயற்பாடுகளில் மேற்பார்வையாளர் என்றவகையில் ஓம்புட்ஸ்மெனின் பிரதான பணிகளில் மனித உரிமைகள் குறித்த ஒரு பகுதியும் உள்ளது. ஏனெனில், தவறான நிர்வாகமானது அத்தியவசியமான அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதற்கு வழிவிடலாம்.

ஓம்புட்ஸ்மன் பதவியை முதன்முதலில் அறிமுகம் செய்த நாடாக சுவீடன் உள்ளது. அங்கு மன்னருக்கும், அவரது அலுவலகத்துக்கும் அவரது நீதிமன்றங்களுக்கும் ஆலோசனை வழங்கும் நோக்கில் அப்பதவி உருவாக்கப்பட்டது. பின்னரான காலத்தில் ஓம்புட்ஸ்மன் பதவியானது ஒரு நாட்டின் பொதுத்துறை நிர்வாகத்தை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையாக அங்கீகரிக்கப்பட்டதுடன் கிட்டத்தட்ட உலகளாவிய ரீதியில் அது அறிமுகம் செய்யப்பட்டதுடன் பல்வேறுபட்ட தேசிய சட்ட முறைமையிலும் ஓம்புட்ஸ்மன் முறையானது தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கும் ஒரு பொறிமுறையாக ஓம்புட்ஸ்மன் முறையானது 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் 156 ஆவது சரத்து ஊடாக அறிமுகம் செய்யப்பட்டது. 1981 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க நிர்வாக விவகாரங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டமானது ஓம்புட்ஸ்மன் அலுவகத்தை நிறுவியதுடன் ஓம்புட்ஸ்மனின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளை வரையறை செய்தது. அத்துடன், 1994 ஆம் ஆண்டைய 26 ஆம் இலக்க நிர்வாக விவகாரங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டமானது முன்னைய (ஆரம்பச்) சட்டத்தின் பகுதி-10 இல் திருத்தங்களைச் செய்து அப்பதவியை மேலும் பலப்படுத்தியது.

அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்துடன் ஒப்புட்ஸ்மன் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் வரை பதவி வகிக்க முடியும்.

CamScanner

***ஓம்புட்ஸ்மனின் அதிகாரங்களும் பணிகளும்***

ஓம்புட்ஸ்மெனின் முக்கிய அதிகாரங்களையும் பணிகளையும் பின்வருமாறு சுருக்கமாகக் கூற முடியும்.

***அதிகாரங்கள்***

1981 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சட்டத்தாலும், 1994 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், நிர்வாக விவகாரங்களுக்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஓம்புட்ஸ்மனின்) பிரதான கடமையாக ஒரு பொது அலுவலர் அல்லது மாகாண சபைகளிலுள்ள அலுவலர், அல்லது பொதுக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர், அல்லது அதுபோன்ற வேறு நிறுவனங்களின் அலுவலரால் இடம்பெற்ற அல்லது உடனடியாக இடம்பெறக் கூடிய அடிப்படை உரிமைகள் மீறல், அல்லது அதையொத்த அநீதி தொடர்பில் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் விசாரனைகளை நடத்தி நீதியான பரிந்துரைகளை முன்வைப்பதாகும்.

***பிரதான பணிகள்***

அரசாங்க இலாகாக்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள் அல்லது அதுபோன்ற நிறுவனங்களில் உள்ள அலுவலர்களால் இடம்பெற்ற அடிப்படை உரிமைகள் மீறல்களை அல்லது அதுபோன்ற அநீதிகளை ஒழிக்கும் நோக்கில் தனிநபர்களால் ஓம்புட்ஸ்மனுக்கு நேரடியாக தெரிவிக்கப்படும் புகார்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி, தவறான நிர்வாக முடிவுகளை மாற்றியமைக்கக் கோருதல், பரிந்துரைத்தல் அல்லது பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன ஓம்புட்ஸ்மனின் பிரதான பணியாக உள்ளது.

மேலுள்ள பந்தியில் உள்ளபடியான ஏதாவது மனித உரிமை மீறல் குறித்து வெளிப்படுத்தி, அதனால் ஏற்படும் அநீதிகளை ஒழிப்பது தொடர்பில் முடிவெடுக்கும் நோக்கிலும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் பாராளுமன்றத்தின் பொது மனுக்கள் குழுவுக்கு முன்கொன்டுவரப்படுகின்ற விடங்களையும் ஓம்புட்ஸ்மன் விசாரனை செய்வார்.

அந்தவகையில், நிர்வாகச் செயற்பாடுகளின்போது உரிமைகள் மீறப்படுகின்ற மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதுடன், நாட்டின் சட்டங்கள் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் என்பவற்றுக்கு இணங்க இலங்கையின் நிர்வாகப் பொறிமுறையை சரியான பாதையில் திருப்புதலும் ஓம்புட்ஸ்மனின் பிரதான பணியான உள்ளது.

**(இது 5 புள்ளிக்கான வினா என்பதனால் எல்லா விடயங்களையும் பரீட்சார்த்திகளிடம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, விடையின் உள்ளடக்கத்தினை மதிப்பிட்டு பொருத்தமான புள்ளிகளை வழங்கவும். இங்கு அறிமுகம் மற்றும் முடிவுரை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.)**



CamScanner

**7. (ii): இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விபரிக்குக (15 புள்ளிகள்)**

**வினாவின் நோக்கம்:** இந்த வினாவின் நோக்கமானது தற்போதைய அரசியலமைப்பின் கீழுள்ள மிக முக்கிய இரு அரசாங்க நிறுவனங்களான ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையேயான தொடர்பு (உறவு) குறித்த பரீட்சார்த்தியின் அறிவினை மதிப்பீடு செய்வதாகும்.

இந்த வினாவானது தற்போதைய அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட பிரதான திருத்தங்களின் (17 ஆம் திருத்தத்தின் பின்னரான திருத்தங்களின்) அடிப்படையில் இரு நிறுவனங்களுக்கிடையோன உறவின் மாறிச்செல்லும் தன்மை குறித்த பரீட்சார்த்தியின் புரிதலை மதிப்பீடு செய்யவும் முனைகின்றது.

**அறிமுகம்:** நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் பாராளுமன்றத்துக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான உறவு ஏன் முக்கியமானது, அது தடைகள் மற்றும் சமன்பாடுகள் தத்துவத்தினை நிலைநாட்ட எவ்வாறு துணைப்புரியும் என குறிப்பிடலாம்.

1978ம் ஆண்டு மூல யாப்பில் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான உறவு தொடர்பாக குறிப்பிடப்பட்ட விடயங்கள் அரசியலமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் (17, 18, 19, 20, 21) ஊடாக மாற்றம் கண்டது என்பதனையும் அறிமுகத்தில் குறிப்பிட முடியும். **(2 புள்ளிகள்).**

**உள்ளடக்கம் (12 புள்ளிகள்)**

இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின்கீழ் அறிமுகம் செய்யப்பட்ட நிறைவேற்றுத் துறையானது ஜனாதிபதித்துவ மற்றும் அமைச்சரவை (கபினட்) அரசாங்க மாதிரிகளின் அடிப்படைகளை உள்வாங்கியிருந்தது. இதன் விளைவாக, அது கலப்பு அரசாங்கப் பண்பினை உள்வாங்கிய ஓர் அரசியல் நிறைவேற்றுத்துறையை அறிமுகம் செய்தது.

அதன்படி, அரசியல் நிறைவேற்றத்துறை என்பது தனியான தேர்தல் ஊடாக மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியையும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெறுகின்ற கட்சி அல்லது குழுவிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்ற பிரதம அமைச்சர் உட்பட அமைச்சரவை அமைச்சர்களையும் உள்ளடக்கியது.

இங்கு ஜனாதிபதியே அரசியல் நிறைவேற்றுத்துறையின் தலைவராக உள்ளார். அரசியலமைப்பின் ஆரம்ப ஏற்பாடுகளின்படி, நாடு முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதப்பட்டு நடாத்தப்படும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஆறு (06) ஆண்டுகள் கொண்ட பதவிக்காலத்துக்கென ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டார். எனினும், அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஐந்து (05) ஆண்டுகளாக வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆரம்பத்தில், ஒருவர் ஆறு (06) ஆண்டுகள் கொண்ட இரண்டு தவணைக் காலத்துக்கே ஜனாதிபதியாக பதவிவகிக்க வரையறுக்கப்பட்டிருந்தது. இந்த வரையறை 2010 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தினூடாக தளர்த்தப்பட்டிருந்தபோதிலும் 2015 இல் நிறைவேற்றப்பட்ட



CamScanner

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக இரு தவணைக்கால வரையறை மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளது. அது இன்றுவரை தொடர்கின்றது.

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழும் பொதுப் பாதுகாப்பு தொடர்பாக நடைமுறையிலுள்ள சட்டம் உட்பட, எழுதப்பட்ட எந்தவொரு சட்டத்தின் கீழும் தனது அதிகாரங்களை பிரயோகித்தல், அவரது கடமைகள் மற்றும் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்கு ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறக் கூடியவராக உள்ளார்.

**பாராளுமன்றம்:** 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழான சட்டவாகத்துறையானது 'பாராளுமன்றம்' என அழைக்கப்படுகின்றது. அது ஓரவையைக் கொண்ட பாராளுமன்றமாக உள்ளதுடன் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஆறு (06) ஆண்டுகளாக இருந்தது. இது வெஸ்ட்மின்ஸ்டர் முறையிலான பாராளுமன்ற அரசாங்கத்தின் கீழ் அமைகின்ற பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை விட ஒரு வருடம் அதிகமானது. எவ்வாறிருப்பினும், அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் பதவிக் காலம் ஐந்து (05) ஆண்டுகள் என தற்போது வரையறை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் 1978 ஆம் ஆண்டைய இரண்டாம் குடியரசு அரசிலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையிலான உறவினை கீழ்வரும் சூழ்நிலைகளின் கீழ் குறிப்பிட முடியும்.

- பாராளுமன்றத்துடன் தொடர்புபட்ட ஜனாதிபதியின் சம்பிரதாய அதிகாரங்களும் பணிகளும்.
- பாராளுமன்றத்தைக் கூட்டல், அமர்வுகளை நிறுத்திவைத்தல் மற்றும் பாராளுமன்றத்தைக் கலைத்தல் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள்.
- பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவை நிறைவேற்றுதல் அல்லது ஏற்றுக் கொள்ளுதலில் பங்கெடுக்க அல்லது செல்வாக்குச் செலுத்த ஜனாதிபதிக்குள்ள இயலுமை அல்லது அதிகாரம்.
- பாராளுமன்றத்துக்கு விடையளிக்க ஜனாதிபதிக்குள்ள பொறுப்பு (ஒரு சம்பிரதாயம்).
- கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மக்களின் நேரடி அங்கீகாரத்தை கோரும் நோக்கில் மக்கள் கருத்தறி வாக்கெடுப்பை நடத்தக் கோருவதுடன் தொடர்புபட்ட ஜனாதிபதியின் அதிகாரம்.
- ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதில் பாராளுமன்றத்தின் வகிபங்கு (குற்றப்பிரேரணை).
- ஜனாதிபதியின் செயற்பாடுகள் மீது பாராளுமன்றம் கொண்டுள்ள கட்டுப்பாடுகள்.

பாராளுமன்ற கூட்டத்தொடர்களில் பங்குபற்றுவது, பாராளுமன்ற வரப்பிரசாதங்களை ஏனைய பிரதிநிதிகள் போன்று அனுபவிப்பது போன்ற அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு உண்டு. வாக்களிப்பில் மாத்திரம் பங்குபற்ற முடியாது. 18வது திருத்தத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஜனாதிபதி பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற ஏற்பாடு அறிமுகம் செய்யப்பட்டது. இது பாராளுமன்றத்தின் மீது ஜனாதிபதியின் தலையீட்டினை அதிகரிப்பதாகவும், தடைகள் மற்றும் சமன்பாடுகள் தத்துவத்தினை மறுதலிப்பதாகவும், நிறைவேற்றுத்துறையின் செயற்பாடுகள் மீது பாராளுமன்ற கட்டுப்பாடு செழுத்துவதற்குள்ள இயலுமையினை மழுங்கடிக்கும் ஒரு முயற்சி எனவும் விமர்சிக்கப்படுகின்றது. இவ்வேற்பாடு 21வது திருத்தத்தில் மாற்றப்படவில்லை (உறுப்புரை 32 (3).



CamScanner

முடிவுரை (1 புள்ளி) எனினும், அண்மைக் காலத்தில் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் கவனம் செலுத்தி, ஜனாதிபதியும் பாராளுமன்றமும் ஒருவரையொருவர் செல்வாக்குச் செலுத்துவதற்குள்ள வரையறைகள் (மட்டுப்பாடுகள்) (குறிப்பாக, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பிரயோகிக்கும் போதும் பணிகளை மேற்கொள்ளும்போதும் உள்ள மட்டுப்பாடுகள்) தொடர்பில் பரீட்சார்த்தி முடிவுரையில் குறிப்பிடக் கூடியவராக இருந்தால் நன்று. விசேடமாக, அண்மைக் காலத்து சில சம்பவங்களை அல்லது அனுபவங்களை தொடர்புபடுத்தி ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையேயுள்ள உறவில் காணப்படும் நெருக்கடி நிலையை குறிப்பிட முடியும். முடிவுரைக்கு ஒரு புள்ளி என்பதனால் முழுமையான முடிவுரையொன்றினை எதிர்பார்க்க முடியாது.

**வினா 08**

**(i) சுவிட்சர்லாந்தின் மத்திய அரசாங்கத்திற்கும் கன்டோன்களுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (10 புள்ளிகள்)**

சுவிட்சர்லாந்தின் மத்திய அரசாங்கத்திற்கும் கன்டோன்களுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பிடும் மாணவரின் திறனைப் பரிசோதிப்பதே இந்த வினாவின் நோக்கமாகும். இந்த விடையில் பரீட்சார்த்தி சுவிஸ் கூட்டாட்சியை விளக்கி ஒரு அறிமுகத்தை எழுதலாம் (அறிமுகத்திற்கு 01 புள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பரீட்சகர்கள் அறிமுகத்தின் மீது தங்கள் சொந்த மதிப்பீட்டினை பயன்படுத்தி புள்ளி வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்,)

**உள்ளடக்கம் (08 புள்ளிகள்)**

சுவிஸ் கூட்டமைப்பு உலகின் பழமைவாய்ந்த கூட்டமைப்புகளில் ஒன்றாகும். இது மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகாரப்பகிர்வுக்கு உதாரணமாகக் கொள்ளப்படுகின்றது. நாட்டின் மக்கள்தொகை, வரலாறு, சமூக மற்றும் அரசியல் அம்சங்கள் அதை ஒரு தனித்துவமான உதாரணமாக மாற்றியுள்ளது.

சுவிஸ் கூட்டமைப்பு 1848 இல் நிறுவப்பட்டது. கன்டோன்கள் (26 கன்டோன்கள்) தங்களின் சொந்த அரசு, அரசியலமைப்பு மற்றும் பெரும்பான்மையான அரசியல் சுயாட்சியை வைத்திருக்க விரும்பின. அவர்களின் விருப்பம் ஒரு சில விடயங்களை மட்டுமே கூட்டாட்சி அரசாங்கத்திற்கு மாற்றுவதாகும், மேலும் மத்திய அதிகாரத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் கணிசமான பங்கேற்பு உரிமைகளையும் மற்றும் கொள்கையை செயல்படுத்துவதில் உள்ள திறன்களையும் தக்கவைத்துக் கொள்ள கன்டோன்கள் விரும்புகின்றன.

சுவிஸ் அரசியலமைப்பின் பிரிவு 3 கூட்டாட்சி கூட்டமைப்பு மற்றும் கன்டோன்களுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வை வரையறுக்கிறது. பொது துணை பட்டியலானது வெளிப்படையாக மத்திய அரசுக்கு ஒப்படைக்கப்பட்டதைத் தவிர அனைத்துப் பணிகளையும் கன்டோன்களுக்கு ஒதுக்குகிறது.

சுவிஸ் பாராளுமன்ற முறை கூட்டாட்சி அரசாங்க முறையில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதித்துவத்திற்கான பொறிமுறையை வகுத்துள்ளது. அமெரிக்காவில் இருப்பது போல் ஒத்திருக்கிறது: இரண்டு சட்டமன்ற சபைகளைக் கொண்ட முழுமையான ஈரங்க சட்ட சபைகள் காணப்படுகின்றன. இதில் தேசிய கவுன்சில் மக்களையும் கன்டோன்களின் கவுன்சில் உறுப்பு நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஒவ்வொரு சபையும் ஒரே மாதிரியான திறன்களைக் கொண்டுள்ளது மற்றும் அனைத்து சிக்கல்களையும் ஒன்றன் பின்



CS CamScanner

# கா.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2023 (2024)
# 23 - அரசியல் விஞ்ஞானம்
## புள்ளி வழங்கும் திட்டம் - இணைப்பு

**வினா 08**

**(i) சுவிட்சர்லாந்தின் மத்திய அரசாங்கத்திற்கும் கன்டோன்களுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (10 புள்ளிகள்)**

சுவிட்சர்லாந்தின் மத்திய அரசாங்கத்திற்கும் கன்டோன்களுக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பிடும் மாணவரின் திறனைப் பரிசோதிப்பதே இந்த வினாவின் நோக்கமாகும். இந்த விடையில் பரீட்சார்த்தி சுவிஸ் கூட்டாட்சியை விளக்கி ஒரு அறிமுகத்தை எழுதலாம் (அறிமுகத்திற்கு 01 புள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பரீட்சகர்கள் அறிமுகத்தின் மீது தங்கள் சொந்த மதிப்பீட்டினை பயன்படுத்தி புள்ளி வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.)

**உள்ளடக்கம் (08 புள்ளிகள்)**

சுவிஸ் கூட்டமைப்பு உலகின் பழமைவாய்ந்த கூட்டமைப்புகளில் ஒன்றாகும். இது மத்தியமயப்படுத்தப்படாத அதிகாரப்பகிர்வுக்கு உதாரணமாகக் கொள்ளப்படுகின்றது. நாட்டின் மக்கள்தொகை, வரலாறு, சமூக மற்றும் அரசியல் அம்சங்கள் அதை ஒரு தனித்துவமான உதாரணமாக மாற்றியுள்ளது.

சுவிஸ் கூட்டமைப்பு 1848 இல் நிறுவப்பட்டது. கன்டோன்கள் (26 கன்டோன்கள்) தங்களின் சொந்த அரசு, அரசியலமைப்பு மற்றும் பெரும்பான்மையான அரசியல் சுயாட்சியை வைத்திருக்க விரும்பின. அவர்களின் விருப்பம் ஒரு சில விடயங்களை மட்டுமே கூட்டாட்சி அரசாங்கத்திற்கு மாற்றுவதாகும். மேலும் மத்திய அதிகாரத்தின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் கணிசமான பங்கேற்பு உரிமைகளையும் மற்றும் கொள்கையை செயல்படுத்துவதில் உள்ள இயலுமைகளையும் தக்கவைத்துக் கொள்ள கன்டோன்கள் விரும்புகின்றன.

சுவிஸ் அரசியலமைப்பின் பிரிவு 3 கூட்டாட்சி கூட்டமைப்பு மற்றும் கன்டோன்களுக்கு இடையிலான அதிகாரப் பகிர்வை வரையறுக்கிறது. மத்திய அரசுக்கு வெளிப்படையாக ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைத் தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களும் கன்டோன்களுக்கு வழங்கப்படுவதனை அரசியலமைப்பின் அதிகாரத்தை ஒதுக்கும் ஏற்பாடு (பிரிவு 3) உறுதிசெய்கிறது.

சுவிஸ் கூட்டாட்சி அரசாங்க முறையின் கீழ் பாராளுமன்றத்தில் கன்டோன்களின் பிரதிநிதித்துவத்திற்கான பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளது. இது அமெரிக்காவவினை ஒத்திருக்கிறது: அவதாவது இரண்டு சட்டமன்ற சபைகளைக் கொண்ட முழுமையான ஈரங்க சட்ட சபைகள் காணப்படுகின்றன. இதில் தேசிய கவுன்சில் மக்களையும் கன்டோன்களின் கவுன்சில் கன்டோன்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. ஒவ்வொரு சபையும் ஒரே அளவான அதிகாரங்களைக் கொண்டிருப்பதுடன் சகல பிரச்சினைகளும் ஒவ்வொரு சபைகளிலும் ஒன்றன் பின் ஒன்றாக வாதிடப்படும். இரு சபைகளும் பெரும்பான்மையுடன் முடிவுகளை அங்கீகரித்து ஒப்புதல் அளித்தால் கூட்டாட்சி சட்டங்கள் செல்லுபடியாகும்.

நேரடி ஜனநாயக செயன்முறையில் சில முடிவுகளுக்குப் பொருந்தக் கூடிய இரட்டைப் பெரும்பான்மை என்ற மூலக் கொள்கை காணப்படுகின்றது: இதன் அர்த்தம் கூட்டாட்சி சட்ட சபைகளால் அல்லது பொதுமக்கள் முன்முயற்சியால் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களுக்காக சம்மதமாகும். இவை மக்களின் கட்டாய வாக்கெடுப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன. இத்தகைய முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் மக்கள் மற்றும் கன்டோன்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். இந்த முறை கூட்டாட்சி தீர்மானம் எடுத்தலில் கன்டோன்களுக்கு ஒரு முக்கிய பங்கை வழங்கியுள்ளது. இம்முக்கியத்துவமானது அரசியலமைப்பின் மூலக்கூறாக மட்டுமல்லாமல் சமஸ்டிக் கொள்கைகள் தொடர்பான தேசிய சட்ட உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் என்பன பாராளுமன்றத்தில் இடம்பெறுவதற்கு முன்னர் கன்டோன்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் கூட வழங்கப்பட்டுள்ளது. கூட்டாட்சிக் கொள்கைகளை தீர்மானிப்பதிலும் செயற்படுத்துவதிலும் மத்திய அரசு, 26 கன்டோன்கள் மற்றும் 3,000 கம்யூன்கள் ஆகியன பல் மட்ட ஆட்சிக்கட்டமைப்பின் கீழ் மேற்கொள்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுவிஸ் கூட்டாட்சியின் மூல யோசனையாக இருந்த அதிகாரங்களின் செங்குத்தான அதிகார பிரிப்பு மறைந்து போவதற்கு இந்த ஒத்துழைப்புடன் கூடிய கூட்டாட்சித் தொடர்பு வழிவகுத்தது.

வரலாற்றுப் பார்வையில், சுவிஸ் சமஸ்டி முறை என்பது தீவிர புரட்டஸ்தாந்து பெரும்பான்மையினத்தவர், வலுவான தேசிய அரசாங்கம் மற்றும் கன்டோண்களுடைய இறைமை அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மறுக்கின்றமை விட்டுக்கொடுப்பதற்கு மறுத்த பழமைவாத கத்தோலிக்க சிறுபான்மையினருக்கும் இடையில் இடம்பெற்ற அரசியல் விட்டுக்கொடுப்பாகும். சுவிஸ் கூட்டாட்சி பிரெஞ்சு, இத்தாலியன் மற்றும் றொமன்ஸ் -(Romansh) மொழி பேசும் சிறுபான்மையினரை ஜேர்மன் மொழி பேசும் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரத்திலிருந்து பாதுகாத்தது.

கடந்த பத்தாண்டுகளில் கான்டோண்களின் பொறுப்புகள் அதிகரித்து வருகின்றன. அந்தவகையில், பொது வருவாய் மற்றும் செலவினங்களில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே மத்திய அரசு கட்டுப்படுத்துகின்றது. இதற்கு மறுபுறமாக, கன்டோன்கள் மற்றும் கம்யுன்கள் மூன்றில் இரண்டு பங்கு

பொது நிதி மற்றும் மனித வளங்களைக் கட்டுப்படுத்துவதுடன் கன்டோண்களும் கம்யூன்களும் மத்தியரசாங்கத்தின் பெரும்பாலான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மிக முக்கியமான வகிபங்கினைக் கொண்டிருப்பதுடன், பல கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பொறுப்பாக இருக்கின்றன. சமஸ்டிக் கூட்டமைப்பிற்கு (மத்தியரசாங்கத்திற்கு) அதிகாரங்களை மாற்றம் செய்கின்றபோது அல்லது புதிதாக அதிகாத்தை வழங்கும்போது அரசியலமைப்புத் திருத்தமும் மக்கள் வாக்கெடுப்பும் அவசியமாகும்.

சுவிஸ் பாராளுமன்றத்தில் சட்ட உருவாக்கம் ஜனநாயக மற்றும் கூட்டாட்சியின் சம முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் ஆகிய இரண்டு கட்டங்களிலும் கன்டோன்களின் செல்வாக்கு மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக, பாராளுமன்றத்தில் சட்டவாக்க செயற்பாடுகள்/ கொள்கை உருவாக்கம் இடம்பெறுவதற்கு முன்பு மக்கள் அச்செயன்முறையில் பங்குபற்றுவதற்கு, கருத்துக்களை முன்வைப்பதற்கு மற்றும் ஆலோசனைகளை செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றமையானது நேரடி ஜனநாயகப் பண்பினை எடுத்துக்காட்டுகின்றது.

முடிவுரை

(பரீட்சார்த்தி பொருத்தமான விடயங்களுடன் கூடிய நல்ல சுருக்கத்தை வழங்கினால், 01 புள்ளி ஒதுக்கப்படும்)

ஒன்றாக விவாதிக்கின்றது. இரு சபைகளும் பெரும்பான்மையுடன் முடிவுகளை அங்கீகரித்து ஒப்புதல் அளித்தால் கூட்டாட்சி சட்டங்கள் செல்லுபடியாகும்.

நேரடி ஜனநாயக செயன்முறையில் சில முடிவுகளுக்குப் பொருந்தக் கூடிய இரட்டைப் பெரும்பான்மை என்ற மூலக் கொள்கை காணப்படுகின்றது: இவை கூட்டாட்சி சபைகளால் அல்லது பொதுமக்கள் முன்முயற்சியால் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள் ஆகும். இவை மக்களின் கட்டாய வாக்கிற்கு உட்படுத்தப்படுகின்றன. இத்தகைய முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால் மக்கள் மற்றும் கன்டோன்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். இந்த முறை கூட்டாட்சி தீர்மானம் எடுத்தலில் கன்டோன்களுக்கு ஒரு முக்கிய பங்கை வழங்கியுள்ளது. இது அரசியலமைப்பின் அடிப்படை கூறுகளில் மட்டுமல்ல கூட்டாட்சி சட்டத்தின் பாராளுமன்றத்திற்கு முந்தைய செயன்முறையிலும் கூட்டாட்சி கொள்கைகளை செயற்படுத்துவதிலும் காணப்படுகிறது. கூட்டாட்சிக் கொள்கைகளை தீர்மானிப்பதிலும் செயற்படுத்துவதிலும் மத்திய அரசு, 26 கன்டோன்கள் மற்றும் 3,000 கம்யூன்கள் ஆகியன பல் மட்ட ஆட்சியின் மூலம் மேற்கொள்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுவிஸ் கூட்டாட்சியின் மூல யோசனையாக இருந்த அதிகாரங்களின் தெளிவான செங்குத்துப் பிரிப்பு மறைந்து போவதற்கு இந்த ஒத்துழைப்புடன் கூடிய கூட்டாட்சித் தொடர்பு வழிவகுத்தது.

ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கினால், சுவிஸ் கூட்டமைப்பு என்பது தீவிர புரட்டஸ்தாந்த் பெரும்பான்மை, வலுவான தேசிய அரசாங்கப் பண்பு மற்றும் பழமைவாத கத்தோலிக்க சிறுபான்மையினர் கன்டோன்களின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க மறுக்கின்றமை போன்றன இணைந்த ஒரு அரசியல் சமரசம் ஆகும். மேலும் சுவிஸ் கூட்டாட்சி பிரெஞ்சு, இத்தாலியன் மற்றும் றொமன்ஜ் -(Romansh) மொழி பேசும் சிறுபான்மையினரை ஜெர்மன் மொழி பேசும் பெரும்பான்மையினரின் சர்வாதிகாரத்திற்கு எதிராக பாதுகாத்தது.

கடந்த பத்தாண்டுகளில் கான்டோன்களின் பொறுப்புகள் அதிகரித்து வருகின்றன. பொது வருவாய் மற்றும் செலவினங்களில் மூன்றில் ஒரு பங்கை மட்டுமே மத்திய அரசு கட்டுப்படுத்துகின்றது. இதற்கு நேர்மாறாக, கன்டோன்கள் மற்றும் கம்யூன்கள் மூன்றில் இரண்டு பங்கு பொது நிதி மற்றும் தனிநபர் வளங்களைக் கட்டுப்படுத்துகின்றன. பரந்த அளவிலான கொள்கைத் திட்டங்களில் முக்கிய பொறுப்புமிக்க செயற்பாட்டாளர்கள் பெரும்பாலான கூட்டாட்சி திட்டங்களை செயற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சமஸ்டிக் கூட்டமைப்பு தொடர்பான ஒவ்வொரு அதிகாரப் பரிமாற்றத்திற்கும் மக்கள் வாக்கெடுப்புடன் கூடிய அரசியலமைப்புத் திருத்தம் தேவைப்படுகிறது.

சுவிஸ் பாராளுமன்றத்தில் சட்ட உருவாக்கம் ஜனநாயக மற்றும் கூட்டாட்சியின் சம முக்கியத்துவத்தை பிரதிபலிக்கிறது. கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் ஆகிய இரண்டு கட்டங்களிலும் கன்டோன்களின் செல்வாக்கு மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. சுவிட்சர்லாந்தில் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் கொள்கை உருவாக்கம், பங்கேற்பு மற்றும் கலந்துரையாடலுடன் கூடிய ஒரு விரிவான பாராளுமன்றத்திற்கு (முந்தைய செயல்முறையுடன் பிணைக்கப்பட்டுள்ளது.)

முடிவுரை

(பரீட்சார்த்தி பொருத்தமான விடயங்களுடன் கூடிய நல்ல சுருக்கத்தை வழங்கினால், 01 புள்ளி ஒதுக்கப்படும்)

8 (II)

**இந்தியாவின் அரசாங்க முறை ஏன் அரைகுறை சமஸ்டி (அர்த்த சமஸ்டி) என்று அழைக்கப்படுகின்றது?**

இந்த வினா இந்திய அரசாங்க முறை ஒரு அரைகுறை சமஸ்டி என்று அழைக்கப்படுவதற்கான காரணங்களை வழங்குவதற்கு பரீட்சார்த்திக்குள்ள திறமையை பரிசோதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒருபுறம் இதை அரைகுறை சமஸ்டி என்று அழைப்பது இந்தியாவின் சமஸ்டித் தன்மையை மறுப்பதாகக் காணப்படுகின்றது. அதன் அரசியல் முறையை விவரிக்க யூனியன் என்ற வார்த்தையைத் தெரிவுசெய்துள்ளது. மறுபுறம், இது ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஸ்டிப் பண்புகளைக் கொண்டுள்ளது. (இது கல்வியாளர்களிடையே ஒரு விவாதத்திற்குரிய விடயமாக இருக்கின்றது)

எனவே பரீட்சார்த்தி இவ்வாறான ஒரு அறிமுகத்துடன் தொடங்கலாம் (அறிமுகத்திற்கு 01 புள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பரீட்சகர்கள் அறிமுகம் தொடர்பாக தமது சொந்த மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்).

**உள்ளடக்கம் (08 புள்ளிகள்)**

இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் ஆகும். இது ஒரு மத்திய அரசு, 28 மாநில அரசுகள் மற்றும் எட்டு யூனியன் பிரதேசங்களைக் கொண்டுள்ளது. மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் இடையே முக்கியமான வேறுபாடு காணப்படுகின்றது. மாநிலங்களுக்கு அரசியலமைப்பின் மூலம் சுயாட்சி வழங்கப்பட்டுள்ளது. அந்த சுயாட்சி சமஸ்டிக்கு ஒத்ததாகும். அதிகாரப் பகிர்வில் பட்டியல் முறையைப் பின்பற்றியுள்ளது. மாநிலங்களில் சட்டமன்றங்கள் உள்ளன, அதில் ஆறு மாநிலங்களில் ஈரங்க சட்டசபையும் ஏனைய 22 மாநிலங்களில் ஓரங்க சட்டசபையும் காணப்படுகின்றது. சட்டசபை (Legislative Assembly) உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இரண்டு சபைகள் காணப்படும் சட்டசபைகளில் மேல் சபைக்கான உறுப்பினர்கள் நியமனம் மற்றும் கீழ் சபை உறுப்பினர்கள் வாக்களித்து தெரிவு செய்தல் என் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றார்கள். ஆளுநர் மத்திய அரசை பிரதிநிதித்துவப்படுத்தினாலும் மாநில நிர்வாக செயல்பாடுகளில் ஆளுநரின் அதிகாரங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

யூனியன் என்ற வார்த்தையின் பயன்பாடு எங்கும் உள்ளது மற்றும் அதை ஒரு அரைகுறை சமஸ்டி என்று அழைப்பது இந்திய வரலாற்றுடன் தொடர்புடையது. அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் ஒற்றுமையை பேணுதல் மற்றும் பன்முகத்தன்மைக்கு இடமளித்தல் போன்ற சவாலை எதிர்கொண்டனர். இந்திய அரசாங்க முறையை சாதாரண காலங்களில் சமஸ்டி அரசாகவும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் ஒற்றையாட்சி அரசாகவும் செயற்பட வைப்பதே நோக்கமாகக் காணப்பட்டது.

## இந்திய சமஸ்டியின் விசேட அம்சங்கள்

இந்திய அரசியலமைப்பில் சமஸ்டிப் பண்புகள் என்று நேரடியாகக் கூறாவிட்டாலும் அரசியலமைப்பில் மறைமுகமாக காணப்படுகின்றது. அரசியலமைப்பு சமஸ்டி முறை அல்ல என்பதை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அதன் கட்டமைப்பில் ஒரு சமஸ்டி அரசியலமைப்பாகும். அரசியலமைப்பு அரசாங்கத்தின் கட்டமைப்பை மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையில் பிரிக்கிறது. மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குகிறது.

இந்த அரசியலமைப்பு ஒற்றையாட்சி அம்சங்களையும் கொண்டுள்ளது. மாநில அரசுகள் மீதான மத்திய அரசின் அதிகாரங்கள், குறிப்பாக அவற்றை கலைக்கும் அதிகாரம் நல்ல உதாரணங்களாகும். இதுவே சில கல்வியியலாளர்களை இந்திய அரசியலமைப்பு அரைகுறை சமஸ்டி என்று கூற வழிவகுத்தது

இருப்பினும், சமீபத்திய தசாப்தங்களில், இந்திய அரசியலமைப்பு பல காரணங்களால் அதிக சமஸ்டி அம்சங்களைப் பெற்றுள்ளது. அவற்றில் சில பின்வருமாறு:

(அ) மத்திய அரசை கட்டுப்படுத்தும் அரசியல் கட்சிகள் தவிர மற்ற மாநில அரசுகள் மாநிலங்களுக்கு அதிக சுயாட்சி வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்து போராடி வருகின்றன.

(ஆ) இந்திய அரசியலில் பல பிராந்திய கட்சிகள் மாநில அரசுகளில் ஆட்சிக்கு வந்துள்ளன. காங்கிரஸ் அல்லது பி.ஜே.பி யை விட பிராந்திய சுயாட்சிக்கு அவர்கள் அதிக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

(இ) ஒரு முக்கியமான சமீபத்திய வளர்ச்சி யாதெனில் மத்திய அரசின் தலையீட்டிலிருந்து விலகி அதிக மாநில சுயாட்சிக்கு ஆதரவாக இந்திய அரசியலமைப்பை வியாக்கியானம் செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் தயாராக உள்ளது என்பதாகும். ஆரசியலமைப்பின் 352வது பிரிவின் கீழ் உள்ள அவசரகால அதிகாரத்தைப் பயன்படுத்தி, பிராந்திய அல்லது எதிர்க்கட்சிகளால் நடத்தப்படும் மாநில அரசாங்கங்களை கலைக்க முயன்ற மத்திய அரசை இந்திய உச்ச நீதிமன்றம் பல சந்தர்ப்பங்களில் தடுத்துள்ளது. நீதிமன்றங்கள் மாநிலங்களுக்கு ஆதரவாக அரசியலமைப்பு விதிகளை விளக்கியுள்ளன. இது இந்திய அரசியலமைப்பின் சமஸ்டி அம்சங்களை வலுப்படுத்த உதவியது.

'சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு' என்பது இந்திய சமஸ்டியின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். அனைத்து சமஸ்டி அலகுகளும் ஒரே அளவிலான அதிகாரங்கள் மற்றும் திறன்களைக் கொண்டிருக்கவில்லை என்பதே இதன் பொருள். விசேட காரணங்களால் மற்றய மாநிலங்களை விட சில மாநிலங்கள் அதிக அதிகாரங்களைக் கொண்டுள்ளன. உதாரணமாக பஞ்சாப், கோவா, அசாம், நாகாலாந்து, மிசோரம், மணிப்பூர் மற்றும் சிக்கிம் போன்ற மாநிலங்கள் மற்ற மாநிலங்களை விட அதிக அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இன-தேசியவாத இயக்கங்கள் மற்றும் பிரிவினைக்கான இனக் கிளர்ச்சிகள் இருந்த இந்த மாநிலங்களுக்கு அதிக சுயாட்சி உரிமைகளை வழங்குவதே இதன் நோக்கம்.

எதிர்ப்புகள் இருந்தாலும் இந்தியா ஒப்பீட்டளவில் அமைதியான முறையில் பல புதிய மாநிலங்களை உருவாக்க முடிந்துள்ளது. சத்தீஸ்கர் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்கள் 2004 இல் உருவாக்கப்பட்டது. ஆந்திர பிரதேச மாநிலத்தை பிரித்து 2014 இல் தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டது. எனவே



CamScanner

இந்தியாவின் மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் திறன் மற்றும் அதிக வன்முறை இல்லாமல் புதிய மாநிலங்களை உருவாக்குதல் என்பன இந்திய சமஸ்டியின் நெகிழ்வுத் தன்மையைக் காட்டுகின்றது.

இங்கு இந்திய சமஸ்டி முறை பரிணாம வளர்ச்சியடைவதையும் அவதானிக்கலாம், இவ்வாறு மாநில அரசுகள் முதலில் இருந்ததை விட அதிகமான பிராந்திய சுயாட்சியைப் பெற்று வருகின்றன. இந்திய அரசாங்க முறையில் சமஸ்டிப் பண்புகளை வலுப்படுத்துவதற்கான ஒரு முக்கிய காரணம் யாதெனில் அரசியலமைப்பு மற்றும் அரசியல் முறையு என்பன இந்தியாவின் பன்முகத்தன்மை மற்றும் பன்மைத்துவ கலாச்சாரத்தை பிரதிபலிக்க வேண்டும் என்ற மக்களின் பொதுவான கோரிக்கையும் அங்கீகாரமும் ஆகும்.

இந்திய முறையில் வலுவான மத்திய அரசு காணப்படுவதற்கான காரணம் சர்வதேச அனுபவங்களில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற சமஸ்டி நாடுகளிலும் வலுவான மத்திய அரசு காணப்படுவதாகும். சுதந்திரத்தின் போது இந்தியாவின் பிரிவினையில் இந்தியாவின் பிராந்திய சிதைவு பற்றிய அச்சம் காணப்பட்டது. பாகிஸ்தானுடனான பினக்கு மற்றும் போர்கள் காரணமாக தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் நிறுவப்பட்ட மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையின் தொடர்ச்சி தொடரந்து காணப்படுகின்றது.

முடிவுரை

(பரீட்சார்த்தி பொருத்தமான முடிவுரையினை வழங்கினால், 01 புள்ளி வழங்கவும்)

**9. இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் தொடர்பாகக் கட்டுரையொன்றினை எழுதுக.**

**நோக்கம்:** இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் தொடர்பாக பரீட்சாத்திகள் கொண்டிருக்கும் அறிவு மற்றும் அதனை விபரிக்கும் திறனை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும். ஒரு நாட்டினுடைய வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தும் உள்ளக மற்றும் வெளியகக் காரணிகள் தொடர்பாக பரீட்சாத்திகள் கொண்டிருக்கும் கோட்பாட்டு ரீதியான அறிவினையும் இவ்வினா மதிப்பிட முற்படுகின்றது.

**அறிமுகம் (3 புள்ளிகள்)** (SC [illegible] -2500 [illegible])

ஒரு நாட்டினுடைய வெளிநாட்டுக் கொள்கையினை பல்வேறுபட்ட உள்ளக மற்றும் வெளியகக் காரணிகள் தீர்மானிக்கும்.

அந்தவகையில் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தும் உள்ளகக் காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ✓ தேசிய அதிகாரம்
- ✓ புவிசார் அரசியல் காரணிகள்
- ✓ சமூக கலாசார காரணிகள்
- ✓ தேசிய பொருளாதார அபிலாசைகள் மற்றும் இயங்கு நிலை, பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்



CamScanner

- ✓ வெளிநாட்டுக் கொள்கையினை செம்மைப்படுத்தும் உயர்குழாமினரின் தனிப்பட்ட மற்றும் கருத்தியல் ரீதியிலான விருப்பங்கள்
- ✓ பொதுசன அபிப்பிராயம்
- ✓ சமூக கலாசார கருத்தியல்கள்

அதேபோல் ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தும் வெளியகக் காரணிகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.

- பிராந்திய மற்றும் பூகோள வலுச்சமநிலை
- வெளிநாடுகளில் ஏற்படும் அரசியல், பொருளாதார மற்றும் மூலோபாய சூழல் மாற்றங்கள்
- நாடு கொண்டிருக்கும் இரு தரப்பு மற்றும் பல்தரப்பு உறவுகளுக்கான விருப்பம்
- அரசுகளின் கொள்திறன்

**உள்ளடக்கம் (15 புள்ளிகள்)**

தேசிய அதிகாரம் வெளிநாட்டுக் கொள்கையின் தன்மையினைத் தீர்மானிக்கின்றது. ஒரு நாடு பலமான மற்றும் பெரும் எண்ணிக்கையிலான இராணுவம், உறுதியான பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலையினைக் கொண்டிருக்கும் போது, அந்நாடு ஆதிக்கம் மிக்க மற்றும் தாக்குதல் நடத்தக்கூடிய வெளிநாடு உறவினை மேற்கொள்வதற்கு கூட தயங்குவதில்லை. எவ்வாறாயினும் இலங்கை ஒரு சிறிய நாடு என்ற வகையில் இக்காரணி நாட்டினுடைய இரு தரப்பு மற்றும் பல்தரப்பு வெளிநாட்டு உறவினை செம்மைப்படுத்துவதற்கு முக்கியமான விடயம் அல்ல.

இலங்கை இந்து சமுத்திரத்தின் முக்கியமானதொரு இடத்தில் அமைந்திருக்கும் ஒரு தீவாகும். வரலாறு முழுவதும் அதனுடைய வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் புவிசார் அரசியல் காரணிகள் மிக முக்கியமான இடத்தினை வகித்துள்ளன. பிராந்திய அதிகார சக்திகளின் செல்வாக்கு (இந்தியா, சீனா) மற்றும் உலகளாவிய அதிகார சக்திகளின் (அமெரிக்கா, ரஷ்யா) செல்வாக்கு என்பவற்றினை வெளிநாட்டு கொள்கை செயல் முறையில் சரியான வகையில் கையாள்வது ஒரு முக்கியமான விடயமாகும்.

இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையில் அண்மைக்காலமாக பொருளாதாரம் மற்றும் வர்த்தக நலன்கள் பெரிதும் செல்வாக்கு செலுத்துவதனை அவதானிக்க முடிகின்றது. அண்மைக் காலங்களில் இடம்பெற்ற இருதரப்பு மற்றும் பல்தரப்பு உறவுகள் யாவும் பொருளாதார மற்றும் வர்த்தக அபிலாசைகளின் விளைவுகளாகும். இலங்கை பல இருதரப்பு (இந்தியா, சீனா, அண்மையில் தாய்லாந்து) மற்றும் பல்தரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார செயற்பாடுகளுக்கான ஒப்பந்தங்களை (SAFTA, SAPTA) கைச்சாத்திட்டுள்ளது. மேலும் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி சீனா, இந்தியா, IMF மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிப் போன்ற பல இருதரப்பு மற்றும் பல்தரப்பு கடன் வழங்குனர்களுடன் உறவினை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளது.

தனிப்பட்ட கருத்தியல், விருப்பங்கள் மற்றும் பொதுஜன அபிப்பிராயம் என்பனவும் ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையின் தன்மையினைத் தீர்மானிக்கின்றன. சுதந்திரத்திலிருந்து 1956ம் ஆண்டு வரை இலங்கை அதிகம் பிரித்தானியாவுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்தது. சுதந்திரத்திற்குப் பின்னரும் பிரித்தானியாவுடன் பாதுகாப்பு மற்றும் மூலோபாய உறவுகளைப் பேணியது. எவ்வாறாயினும்

இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாடு 1956ம் ஆண்டு ஆட்சி மாற்றத்துடன் மாற்றமடைந்தது. 1977ம் ஆண்டு வரை இலங்கை அணிசேரா இயக்கத்தின் பிரதான ஆதரவாளராக திகழ்ந்தது. இக்காலத்தில் இலங்கையின் இருதரப்பு உறவுகள் சோசலிச நாடுகளான ரஷ்யா, சீனா மற்றும் கியூபா ஆகிய நாடுகளுடன் அதிகரித்தது.

1977–1987 வரையில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மேற்கு சார்புத்தன்மையினை அதிகம் வெளிக்காட்டியது. சுதந்திரத்திற்கு பின்னரானக் காலத்தில் அமெரிக்காவுடன் முதன் முதலாக மிக நெருக்கமான உறவினை (1980களில்) பேண ஆரம்பித்தது. 2005 – 2015ம் ஆண்டு வரை சீனா இலங்கைக்கு மிக நெருக்கமான வெளிநாட்டு சக்தியாகக் காணப்பட்டது.

பொதுஜன அபிப்பிராயம் என்பது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் ஒரு பிரதான காரணியாக இல்லாதிருந்தப் போதும், அது மேற்கத்தேய ஜனநாயக நாடுகளில் வெளிநாட்டுக் கொள்கை செயன்முறையில் செல்வாக்கு மிக்க அம்சமாகக் காணப்படுகின்றது. தாய்லாந்து, மியன்மார் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடனான இலங்கையின் வெளிநாட்டு உறவு சமூக கலாசார காரணிகளான மதம் மற்றும் இனத்துவம் என்பவற்றின் செல்வாக்கினால் தீர்மானிக்கப்படுகின்றன.

பிராந்திய ரீதியாகவும் பூகோள ரீதியாகவும் அதிகாரக் கட்டமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஒரு தேசத்தினுடைய வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் மிகப் பெரிய செல்வாக்கினைச் செலுத்துகின்றன. குறிப்பாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏற்படுகின்ற மூலோபாய மற்றும் அரசியல் அபிவிருத்தி மற்றும் சீனா உலக அதிகார சக்தியாக எழுச்சிப்பெற்றதனையடுத்து பல்துருவ உலக முறைமை, இருதுருவ வலுச்சமனிலையாக நிலைமாற்றம் பெற்றமை என்பன இன்று இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானிக்கின்ற பிரதான வெளிக்காரணிகளாகக் காணப்படுகின்றன.

Kenneta Waltz என்பவர் குறிப்பிடுவது போன்று (முன்னணி கட்டமைப்பு யதார்த்தவாதி) அரசுகளின் கொள்திறனின் பகிர்வு நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கைகளை தீர்மானிப்பதில் நேரடியாகவே செல்வாக்குச் செலுத்துகின்றன. இலங்கைப் போன்ற சிறிய அரசுகள் இவ் யதார்த்தங்களைக் கருத்திற் கொண்டு வல்லரசுகளுடன் இருதரப்பு உறவுகளைப் பேண வேண்டும்.

**முடிவுரை (02 புள்ளிகள்)**

இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் பன்முக உள்ளக மற்றும் வெளியகக் காரணிகள் செல்வாக்கு செலுத்துவதனை இதன் மூலம் அடையாளம் காண முடிகின்றது. எவ்வாறாயினும் இக்காரணிகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச முறைமையில் இடம்பெறுகின்ற இயங்குநிலை மற்றும் சம்பவங்கள் காரணமாக மாற்றமடையக் கூடியவை என்பதனை பரீட்சாத்திகள் குறிப்பிடுவது பொருத்தமாகும். இதனடிப்படையில் வெளிநாட்டுக் கொள்கையின் தன்மையும் மாற்றத்திற்கு உள்ளாகின்றது.

CamScanner

10. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் இரண்டுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.
(ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள்)

**(i) மோதல் தீர்வு.**

இந்த வினா மாணவர்களின் மோதல் தீர்வு செயன்முறை மற்றும் மோதல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை விபரிக்கும் திறனைப் பற்றிய புரிதலை மதிப்பிட முயல்கிறது.

மோதல் மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றைக் கற்பது ஒப்பீட்டளவில் அரசியல் விஞ்ஞான பாடப்பரப்பின் புதிய பகுதிகளாகும். 1980 களின் பிறகு அரசியல் விஞ்ஞானம் மோதல் மற்றும் மோதல் தீர்வு கற்கையை இணைத்துக்கொண்டது. பனிப்போருக்குப் பின்னர் நாடுகளிற்குள் உள்நாட்டு மோதல்கள் தீவிரமடைந்ததால் இப்பதம் பிரபலயமடைந்தது.

மோதல் தீர்வு என்பது ஒரு நீண்ட செயன்முறையாகும். மோதலின் முழுமையான தீர்வு என்பது கடினமாக இருந்தாலும் மோதலின் பாதகமான இயல்பை மிகவும் சாதகமான இயல்பாக மாற்ற முடியும். அந்தவகையில், ஒரு மோதலைக் கையாள்வதில் சில வழிமுறைகள் காணப்படுகின்றன. அந்த உபாயங்கள் முன் எச்சரிக்கை செய்தல், மோதல் தடுப்பு, மோதல் முகாமைத்துவம், மோதல் நிலைமாற்றம், மோதலுக்குப் பின்னரான சமாதானத்தினைக் கட்டியெழுப்புதல், மற்றும் மோதல் தீர்வு என அடையாளங் காணப்பட முடியும்.

**முன் எச்சரிக்கை செய்தல்** என்பதன் முக்கிய கருத்து யாதெனில் சாத்தியமான மோதல்களை முன்கூட்டியே முன் எச்சரிக்கை அறிகுறிகளால் அடையாளம் காண முடியும் என்பதும் மற்றும் ஆரம்ப கட்டத்தில் அவற்றை வெளிப்படுத்துவதும் மோதல்களைக் கையாளுவதற்கான சிறந்த வழியாகும். மோதலின் அறிகுறிகள், அது நிகழக்கூடிய சாத்தியமான இடங்கள் மற்றும் சாத்தியமான செயற்பாட்டாளர்கள் அடையாளம் காணப்பட்டவுடன் மோதல் தடுப்பு முறைகளைப் பயன்படுத்தலாம்.

**மோதல் தடுப்பு** என்பது மோதல் உருவாக்கத்தினுடைய ஆரம்ப கட்டத்தில் அதற்கான காரணங்கள், அதன் நிலை மற்றும் தரப்புக்களை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாகும். மேலோட்டமான தடுப்பு (Light prevention) என்பது மோதல்கள் வன்முறை எனும் கட்டத்திற்குள் நுழைவதைத் தடுப்பதாகும். ஆழமான தடுப்பு (Deep prevention) என்பது மோதலிற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அதன் அதிகரிப்பைத் தடுப்பதாகும்.

**மோதல் முகாமைத்துவம்** என்பது மோதலின் தீவிரத்தை கட்டுப்படுத்தி மற்றும் அது வன்முறை வடிவத்தில் நுழைவதைத் தடுக்கும் செயன்முறையாகும்.

**மோதல் நிலைமாற்றம்** என்பது மோதலினுடைய கட்டமைப்புகள் மற்றும் அடிப்படைக் காரணங்களை நிலைமாற்றுவதன் மூலம் வேறு ஒரு கட்டத்திற்கு மாற்றுவதாகும். ஒரு வெற்றிகரமான மோதல் நிலைமாற்றத்திற்கு மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புக்களிடையே மோதலுக்கு வழிவகுக்கும் காரணங்கள் மற்றும் மோதலின் மூலம் குறிப்பிட்ட தரப்புக்கள் அடைய விரும்பும் குறிக்கோள்களில் மாற்றங்களை ஏற்படுத்தல் அவசியமாக இருக்கிறது.



CamScanner

ஒரு சமாதான உடன்படிக்கை அல்லது மோதலினை இராணுவ ரீதியாக முடிவுக்குக் கொண்டுவருவது மோதலைத் தீர்ப்பதற்கான அத்தியாவசிய முன்நிபந்தனைகளை மட்டுமே வழங்கும். மோதல் தீர்வு செயல்முறையில் **மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்** மீண்டும் மீண்டும் ஏற்படும் மோதல்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மோதலைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நான்கு வழிமுறைகள் காணப்படுகின்றன.

**பேச்சுவார்த்தை** என்பது மோதல் தரப்பினர் அதைத் தீர்க்கப் பயன்படுத்தும் கலந்துரையாடல் செயன்முறையாகும். மோதல் தரப்பினர் பேச்சுவார்த்தை செயற்பாட்டினூடாக பரஸ்பரம் ஒப்புக்கொண்ட அல்லது பகிரப்பட்ட விதிமுறைகளை அடைய முயற்சிக்கின்றனர்.

**மத்தியஸ்தம்** என்பது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் முரண்படும் பிரச்சினைகளிலிருந்து பரஸ்பரம் இணக்கமான உடன்பாட்டுக்கு வருவதற்கு மூன்றாம் தரப்பினர் மூலம் உதவும் செயன்முறையாகும்.

ஒரு வெற்றிகரமான பேச்சுவார்த்தை அல்லது மத்தியஸ்தத்திற்குப் பின்னர் முரண்பட்ட தரப்பினர் **சமாதான உடன்படிக்கைக்கு** உடன்படலாம்.

**சமாதானத்தை கட்டியெழுப்புதல்** என்பது மோதல் நிறுத்தப்பட்டதன் பின்னர் ஏற்படும் மோதல்களைத் தடுப்பதையும், மோதலிற்கான காரணங்களைத் தீர்ப்பதையும், மோதலின் அடிப்படைக் காரணங்களை அடையாளம் காண்பதையும் நோக்கமாகக் கொண்ட நீண்டகால செயன்முறையாகும்,

**(ii) சட்டத்தின் ஆட்சி**

இந்த வினாவானது சட்ட ஆட்சி எண்ணக்கரு, அதன் அடிப்படைக் கூறுகள் மற்றும் ஜனநாயக ஆட்சி முறையில் சட்ட ஆட்சியின் முக்கியத்துவம் பற்றிய மாணவர்களின் புரிதலை மதிப்பிட முயல்கிறது.

ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படை மூலக் கொள்கையாக சட்டத்தின் ஆட்சி கருதப்படுகிறது. சட்டத்தின் ஆட்சி இல்லாமல் ஜனநாயகம் இருக்க முடியாது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டத்தின் ஆட்சி என்பதன் கருத்து யாதெனில் சட்டம் ஆட்சியாளர்களுக்கும், ஆளப்படுபவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் சமமாக பிரயோகிக்கப்பட வேண்டும் என இலகுவாகப் பொருள் கொள்ளப்படுகிறது. சட்டங்களின் உருவாக்கம், அவற்றின் அமுலாக்கம் மற்றும் சட்ட விதிகளுக்கிடையேயான உறவுகள் ஆகியவை சட்டப்பூர்வமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன, எனவே, மிக உயர்ந்த பதவியில் உள்ள அதிகாரி உட்பட எந்தவொரு நபரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல என்பதை சட்டத்தின் ஆட்சி குறிப்பிடுகின்றது.

பிரித்தானிய சட்ட வல்லுநரும் அரசியலமைப்பு கோட்பாட்டாளருமான ஆல்பேர்ட் வென் டைசி (Albert Venn Dicey) அரசியலமைப்பு சட்டம் என்ற தனது நூலில் சட்டத்தின் ஆட்சி என்பது அரசாங்கத்தின் அதிகாரத்துவம் அல்லது அதன் அதிகாரிகள் ...

மற்றும் தனிமனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தைப் பின்பற்றுதல் வேண்டும் என்று விபரித்தார்.

சட்ட ஆட்சித் தத்துவம் பின்வரும் மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது.

- உயர் அதிகாரி உட்பட அரசாங்கத்தின் அனைத்து அதிகாரிகளும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டவர்கள்.

- சட்டத்தை உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் அதிகாரம் தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்பு வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

- தன்னிச்சையாக கைது செய்தல், சித்திரவதை மற்றும் தவறான தண்டனை வழங்கல் போன்ற செயல்களின் மூலம் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை மீறுவதை அரசு தவிர்க்க வேண்டும்.

- அரசின் அதிகாரத்துவ வரையறைகள் அரசியலமைப்பின் மூலம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நீதித் தீர்ப்புகளால் பாதுகாக்கப்பட வேண்டும்.

- அரசாங்கத்தின் பிற துறைகளிலிருந்து நீதித்துறையை நிறுவன ரீதியாகப் பிரிப்பது சட்ட ஆட்சியின் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது.

ஆனால் சட்டத்தின் ஆட்சி என்பது அரசாங்கத்தைப் பற்றியது மட்டுமல்ல. இது பிரஜைகளின் சட்ட விதிமுறைகளுடன் உடன்படாதபோதும் அவற்றை மதிக்க வேண்டும் மற்றும் அவற்றுக்கு இணங்க வேண்டும் என்பதையும் குறிப்பிடுகின்றது. அவர்களின் நலன்கள் மற்றவர்களுடன் முரண்படும் போது அவர்கள் தங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் என்ன என்பதையும் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சட்டத்தின் ஆட்சிக்கும் ஜனநாயகத்துக்கும் இடையே உள்ள தொடர்பைப் பற்றி நாம் விவாதிக்கும்போது, 'சட்டத்தின் மூலம் ஆட்சி' என்பதற்கு இடையே ஒரு அடிப்படை வேறுபாடு காட்டப்பட வேண்டும். இதன் மூலம் சட்டம் என்பது அரசாங்கத்தின் ஒரு கருவியாகும் மற்றும் அரசாங்கம் சட்டத்திற்கும் 'சட்டத்தின் ஆட்சிக்கும்' அடிபணிய வேண்டும். இது அரசாங்கம் உட்பட சமூகத்தில் உள்ள அனைவரும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதைக் குறிக்கிறது. முக்கியமாக அதிகாரத்தின் மீதான அரசியலமைப்பு வரையறைகள் ஜனநாயகத்தின் முக்கிய ஒரு அம்சமாகும். இது சட்டத்தின் ஆட்சியைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

சட்ட ஆட்சியின் மூலத்தத்துவம் சில நெறிமுறை சார்ந்த பெறுமதிகளையும் கொண்டிருக்கின்றது. சுதந்திரம், சமத்துவம், மனித கௌரவம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவை அத்தகைய நெறிமுறை சார்ந்த பெறுமதிகள் ஆகும்.



CamScanner

**(iii) இலங்கையும் சார்க் (SAARC) அமைப்பும்**

இவ் வினாவானது சார்க் அமைப்பு பற்றிய மாணவர்களின் அறிவு, ஒரு பிரதான பிராந்திய பலதரப்பு அரசுகளுக்கிடையேயான ஒழுங்கமைப்பாக அதன் முக்கியத்துவம் மற்றும் சார்க் அமைப்பில் இலங்கையின் வகிபங்கு ஆகியவற்றை மதிப்பிட முயல்கின்றது.

தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (SAARC) என்பது தெற்காசியாவில் உள்ள பிராந்திய பலதரப்பு அரசுகளுக்கிடையேயான ஒழுங்கமைப்பு மற்றும் புவிசார் அரசியல் ஒன்றியம் ஆகும். இவ்வமைப்பின் பிரதான நோக்கங்களாக உறுப்பு நாடுகளிடையே பொருளாதார மற்றும் சமூக-கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் அவர்களிடையே பரஸ்பர நம்பிக்கையை அதிகரித்தல் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

சார்க் அமைப்பு 08 டிசம்பர் 1985 அன்று டாக்காவில் சார்க் சாசனத்தில் கையெழுத்திட்டதன் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. சார்க் அமைப்பு தற்போது ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், இந்தியா, மாலைத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய எட்டு உறுப்பு நாடுகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வமைப்பின் செயலகம் 17 ஜனவரி 1987 இல் காத்மாண்டுவில் அமைக்கப்பட்டுள்ளது.

பிராந்திய ஒழுங்கமைப்பை உருவாக்குவதில் சார்க் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினராக இலங்கை தீவிர பங்கை வகித்தது. தெற்காசிய நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பின் யோசனை மூன்று மாநாடுகளில் விவாதிக்கப்பட்டது: ஏப்ரல் 1947 இல் புது தில்லியில் நடைபெற்ற ஆசிய உறவுகள் மாநாடு மே 1950 இல் பிலிப்பைன்ஸில் Baguio மாநாடு மற்றும் ஏப்ரல் 1954 இல் இலங்கையில் நடைபெற்ற கொழும்பு அதிகார சக்திகள் மாநாடு (the Colombo Powers Conference).

சார்க் அமைப்பிற்கான முதலாவது விதிமுறைகளை உருவாக்கும் கூட்டத்தை ஏப்ரல் 1981 இல் இலங்கை நடத்தியது. தெற்காசியாவிற்கான ஒரு பிராந்திய அமைப்பை பங்காளதேசம் முன்மொழிந்தபோது அந்த முன்மொழிவை உடனடியாக அங்கீகரித்த ஒரு நாடாக இலங்கை காணப்பட்டது. தொடர்ச்சியாக 1981 செப்டம்பரில் சார்க் அமைப்பிற்கான இரண்டாவது கூட்டத்தை இலங்கை நடத்தியது, இதில் பிராந்திய ஒத்துழைப்புக்கான பல பரந்த விடயங்கள் அடையாளம் காணப்பட்டன.

1991 இல் 06 வது சார்க் உச்சி மாநாடு, 1998 இல் 10 வது சார்க் உச்சி மாநாடு மற்றும் 2008 இல் 15 வது சார்க் உச்சி மாநாடு ஆகியவற்றை இலங்கை நடத்தியது. அத்துடன் 1991 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுகளை (SAFG or SAF Games) நடத்தியது.

தெற்காசியாவின் தனித்துவமான கலைகளை மேம்படுத்துவதற்காக இலங்கையில் சார்க் கலாச்சார மையத்தை நிறுவ இலங்கை அரசாங்கம் முன்வந்தது. அதன்படி இது 2009 ஆம் ஆண்டு கொழும்பில் நிறுவப்பட்டது.

CamScanner

இலங்கை தெற்காசிய சுதந்திர வர்த்தகப் பகுதி (SAFTA) மற்றும் தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA) ஆகியவற்றிலும் உறுப்பினராக உள்ளது.

சுங்கச் சலுகைகள் பரிமாற்றம் மூலம் சார்க் பிராந்தியத்தில் பரஸ்பர வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை ஊக்குவித்து நிலைநிறுத்துவதற்கான உறுப்பு நாடுகளின் விருப்பத்தை SAPTA பிரதிபலிக்கிறது. 1991 டிசம்பரில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான (SAARC) ஆறாவது உச்சி மாநாட்டில் சார்க் நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை தாராளமயமாக்கும் யோசனையை இலங்கை முதன்முதலில் எழுப்பியது. ஆயினும் SAPTA வின் கீழ் இலங்கையின் ஏற்றுமதி அளவு ஒருபோதும் திருப்திகரமான நிலையை எட்டவில்லை. .

தெற்காசிய சுதந்திர வர்த்தகப் பகுதிக்கான ஒப்பந்தம் (SAFTA) முன்னுரிமை வர்த்தகத்தை அதிகரிப்பதன் மூலம் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு திட்டத்தை மேலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இது SAPTA ஸ்தாபனத்துடன் தொடங்கப்பட்டது. SAFTA இன் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள் சில விவசாய மற்றும் பிரதான பொருட்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சார்க்கின் முக்கியமான பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களில் இருந்து அதிகபட்ச வாய்ப்புகளைப் பெறுவதற்கு இலங்கை தன்னை அர்ப்பணிக்க வேண்டும். இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் பிராந்திய எல்லையைப் பகிர்ந்து கொள்ளாத ஒரு உறுப்பினர் என்றவகையில் சார்க்கில் செயற்றிறனை மறுசீரமைப்பதில் இலங்கை ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும் என்று குறிப்பிடப்படுகின்றது.

**(iv) கலப்பு அரசாங்க முறை**

இவ் வினாவானது அரசாங்கத்தின் ஒரு மாதிரியாக அல்லது முறையாக கலப்பு அரசாங்க முறை பற்றிய மாணவர்களின் புரிதலையும் அதன் அடிப்படை அம்சங்களை விளக்கும் திறனையும் மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒரு கலப்பு அரசாங்க முறை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறு அரசாங்க முறைகளின் அம்சங்களை ஒருங்கிணைத்துள்ள ஒரு முறையாகும். வழக்கமாக, ஒரு கலப்பு அரசாங்க முறை ஜனாதிபதித்துவ மற்றும் பாராளுமன்ற முறைகளின் அம்சங்களை ஒருங்கிணைத்துள்ளது. ஜனாதிபதித்துவ மற்றும் பாராளுமன்ற முறைகளின் அம்சங்களை ஒருங்கிணைக்கும் அரசாங்கத்தின் ஒரு முறை 'அரைகுறை–ஜனாதிபதித்துவ முறை' என்றும் அழைக்கப்படுகிறது.

அரசியல் விஞ்ஞான ஆய்வில் அரைகுறை–ஜனாதிபதித்துவம் என்ற கருத்து முதன்முதலில் பிரெஞ்சு அரசியல் விஞ்ஞானி மொரிஸ் டுவர்ஜரால் எடுத்துரைக்கப்பட்டது. டுவர்ஜர் விளக்கியது போல், ஒரு அரைகுறை–ஜனாதிபதித்துவ ஆட்சி முறையானது அரசின் தலைவர் சர்வஜன வாக்குரிமையால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எனவும் சாதாரண பாராளுமன்ற ஆட்சியில் ஒரு அரச தலைவரின் அதிகாரங்களை விட அவர் அதிகமான அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார் எனவும் வகைப்படுத்தப்படுகிறது. இவ் அரசாங்கம் ஒரு பிரதம மந்திரி மற்றும் அமைச்சர்களைக் கொண்ட



CamScanner

உருவாக்கப்பட்ட அமைச்சரவையைக் கொண்டுள்ளது. அவர்கள் பாராளுமன்ற வாக்கெடுப்பு மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம். பின்னர் அவர் பாராளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் திறனையும் ஒரு அரைகுறை -ஜனாதிபதித்துவ முறை அரசாங்கத்தின் சிறப்பியல்பு என்று கூறினார்.

அரைகுறை ஜனாதிபதித்துவ ஆட்சி முறையில் ஒரு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நிறைவேற்று அதிகாரம் பிரிக்கப்படும், ஆனால் ஜனாதிபதிக்கு கணிசமான அதிகாரங்கள் இருக்கும் என்று Patrick O'Neil கூறுகிறார்.

ஜியோவானி சார்டோரி பின்வரும் பண்புகள் அல்லது பல பண்புகள் கூட்டாகப் பொருந்தினால் அது ஒரு அரைகுறை -ஜனாதிபதித்துவ அரசியல் முறையாக இருக்கும் என இன்னும் விரிவான விளக்கத்தை அளிக்கிறார்:

(ii) அரசுத் தலைவர் (ஜனாதிபதி) ஒரு நிலையான பதவிக் காலத்திற்கு மக்கள் வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

(iii) அரசுத் தலைவர் நிறைவேற்று அதிகாரத்தை பிரதமருடன் பகிர்ந்து கொள்கிறார், நிறைவேற்று துறையில் இரட்டை அதிகாரத்தை உருவாக்குகிறார்.

(iv) ஜனாதிபதி பாராளுமன்றத்தில் இருந்து சுயாதீனமானவர், ஆனால் அவர் தனியாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சி செய்ய உரிமை இல்லை, எனவே அவரது விருப்பம் அவரது அரசாங்கத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

(v) பிரதம மந்திரியும் அவரது அமைச்சரவையும் ஜனாதிபதியில் இருந்து சுயாதீனமானவர்கலாகவும் அவர்கள் பாராளுமன்றத்தை சார்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர் அவர்கள் பாராளுமன்ற நம்பிக்கை அல்லது நம்பிக்கையில்லா அல்லது இரண்டுக்கும் உட்பட்டவர்கள், மேலும் அவர்களுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்ற பெரும்பான்மையின் ஆதரவு அவசியமானது .

(vi) அரைகுறை-ஜனாதிபதித்துவத்தின் இரட்டை அதிகாரத்துவ கட்டமைப்பு பல்வேறு சமநிலைகளை அனுமதிக்கிறது மற்றும் நிறைவேற்றுத் துறைக்குள் அதிகார இடமாற்றம் இடம்பெறுவதை அனுமதிக்கின்றது.

பொதுவாக, பின்வரும் அம்சங்களை அரைகுறை -ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் பண்புகளாகப் புரிந்து கொள்ளலாம்.

i) பாராளுமன்றத்திலிருந்து சுயாதீனமான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி.
ii) ஜனாதிபதி மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
iii) ஜனாதிபதிக்கு கணிசமான அளவு நிறைவேற்று அதிகாரம் உள்ளது.
iv) ஜனாதிபதியும் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையும் நிறைவேற்று அதிகாரத்தின் இணையான மையங்கள்.
v) மந்திரிசபை பிரதம மந்திரியால் தலைமை தாங்கப்பட்டு பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாகும்.

1958 இல் பிரான்சின் ஐந்தாவது குடியரசின் அரசியலமைப்பை நிறுவிய பின்னர் கலப்பு அரசாங்க முறையின் அடிப்படைப் பண்புகள் விவாதத்திற்கு வந்தன. அரசியலமைப்பின் 5 மற்றும் 21 வது பிரிவுகள், ஜனாதிபதி அரசு மற்றும் அரசியலமைப்பின் பாதுகாவலர் என்று கூறுகிறது, அதே நேரத்தில்



CamScanner

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் கொள்கைகள் குறித்து முடிவெடுக்க பிரதமருக்கு அதிகாரம் உள்ளது என்கின்றது.

கிழக்கு ஐரோப்பா மற்றும் முன்னாள் சோவியத் குடியரசுகளில், அரைகுறை-ஜனாதிபதித்துவம் மிகவும் பொதுவான ஆட்சி முறையாக உருவெடுத்துள்ளது. ஆபிரிக்காவில் இருந்து அங்கோலா, பெனின், கானா மற்றும் மாலி உட்பட 42 நாடுகளை இம்முறைக்கு உதாரணமாக ராபர்ட் எல்கி பட்டியலிட்டுள்ளார். அமெரிக்காவிலிருந்து டொமினிகன் குடியரசு, கயானா மற்றும் ஹைட்டி, ஆசியாவில் இருந்து இலங்கை, மாலைத்தீவு மற்றும் தென் கொரியா கிழக்கு ஐரோப்பாவிலிருந்து பல்கேரியா, போலந்து மற்றும் ருமேனியா, முன்னாள் சோவியத் ஒன்றிய ஆட்சிகளில் இருந்து பெலாரஸ், கிர்கிஸ்தான் மற்றும் லிதுவேனியா, மேற்கு ஐரோப்பாவிலிருந்து ஆஸ்திரியா, பின்லாந்து, போர்த்துக்கல் மற்றும் பிரான்ஸ் என உதாரணங்கள் உள்ளன.

(எவ்வாறாயினும், சில மாணவர்கள் அரைகுறை-ஜனாதிபதித்துவ முறைக்கு உதாரணமாக இலங்கை அரசாங்க முறையின் அம்சங்களைப் பற்றி விரிவாக விவரிக்கலாம்) .

கலப்பு மாதிரி அரசாங்க முறையின் பலம் மற்றும் பலவீனங்கள் பற்றிய விமர்சனங்கள் உள்ளன. ஜனாதிபதியின் அதிகாரத்தின் மீது வலுவான தடைகள் மற்றும் சமன்பாடுகளை உருவாக்குவதற்கு இது வழிவகுத்துள்ளது. எவ்வாறாயினும், இரண்டு அதிகாரங்களும் வெவ்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் போது அரைகுறை ஜனாதிபதி முறைமைகளில் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான மோதல்கள் பரவலாகப் பதிவாகியுள்ளன.

**(v) இனத்துவ அரசியல் கட்சிகள்**

இவ் வினாவானது இலங்கையுடன் தொடர்புடைய இனத்துவ அடிப்படையிலான அரசியல் கட்சிகளைப் பற்றிய மாணவர்களின் அறிவை மதிப்பிட முயல்கிறது.

ஒரு குறிப்பிட்ட இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளையே இனத்துவக் கட்சிகள் என வரையறுக்கப்படுகின்றன.

பன்மைத்துவ கலாச்சார மற்றும் பல்லின சமூகங்கள் இனத்துவக் கட்சிகளின் வளர்ச்சிக்கான பிரதான காப்பகங்களாகும். பனிப்போருக்குப் பின்னர் நாகரீக மோதல்கள் பற்றிய விவாதங்களோடு இனத்துவக் கட்சிகள் மீதான ஆர்வம் அதன் உச்சத்தை அடைந்தது.

இலங்கையின் அரசியல் கட்சி களம் பல இனத்துவக் கட்சிகளை உள்ளடக்கியது. அரசியல் அணிதிரட்டலில் இன அடையாளத்தின் பங்கு இலங்கைக்கு புதியதல்ல. இது 1930 களில் தொடங்கி சுதந்திரத்திற்குப் பின்னர் அதிக வெளிப்பாட்டைக் கொண்ட ஒரு அரசியற் போக்கு ஆகும்.

1950களின் முற்பகுதியில் அரசியல் கட்சிகள் உருவாகத் தொடங்கியபோது இந்தப் போக்கு தொடர்ந்தது. தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் உட்பட தமிழ்-பேசும் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதல் இனத்துவக் கட்சிகள் சமஷ்டிக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸும் ஆகும். பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்



CamScanner

கட்சி குறிப்பாக சிங்கள வாக்காளர்களை ஈர்க்கும் ஒரு கட்சியாக உருவெடுத்தது, ஆனால் மற்ற சமூகங்களின் வாக்காளர்களை ஒதுக்கவில்லை.

இது இன மோதல்களின் பின்னணியில் 1980 களுக்குப் பின்னர் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. ஒரே இனத்துக்குள் உள்ள பிளவுகளை வெளிப்படுத்தும் கட்சிகள் மற்றும் மத சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் உட்பட பலதரப்பட்ட இனத்துவக் கட்சிகள் எழுவதற்கும் இது வழி வகுத்தது.

1986 இல் முஸ்லிம்களுக்கான கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. மலையக பெருந்தோட்ட தமிழ் சமூகத்தின் பிரதான அரசியல் கட்சியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டு வருகின்றது. மலையக மக்கள் முன்னணியும் இந்தக் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. பல சிங்கள-பௌத்த கருத்தியல் கட்சிகளும் இருந்தன. ஜாதிக ஹெல உறுமய, பிவித்துரு ஹெல உறுமய மற்றும் அபே ஜனபல பக்சய ஆகியவை பிரபலமான உதாரணங்களாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1980களில் தோன்றிய பல புதிய தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றில் பலர் ஆரம்பத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போராளிக் குழுக்களாக இருந்தனர். பின்னர் அவை பாராளுமன்றக் கட்சிகளாக மாறின. வடக்கு மற்றும் கிழக்கில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகியவை பாராளுமன்ற தமிழ் இனத்துவக் கட்சிகளாக இன்றும் செயற்படுகின்றன.

அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் (AITC), தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (TMTK), இலங்கைத் தமிழ் அரசு கட்சி (ITAK), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) ஆகியவை இலங்கையின். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இனத்துவக் கட்சிகளுக்கு தற்போதைய உதாரணங்களாகும்.


இனத்துவக் கட்சிகள் குறிப்பாக அரசாங்கத்தின் கட்சிகளாக இருக்க முற்படும் போது அவற்றின் மத்தியில் கூட்டணிகளை உருவாக்கும் போக்கு காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) மற்றும் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு (MNA) போன்ற பல கட்சிகளின் கூட்டணிகள் பொதுவான அரசியல் முன்னுரிமைகளைப் பகிர்ந்துகொள்வதற்கான உதாரணங்களாகும.

CS CamScanner

**(vi) கொள்கை வட்டம்**

இந்த வினாவில் கொள்கை செயன்முறையின் படிநிலைகளை மாணவர்கள் விவரிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொள்கை வட்டமானது பொதுக் கொள்கை உருவாக்கும் செயன்முறையின் பல்வேறு படிநிலைகளால் அமைக்கப்பட்டுள்ளது.. ஜேம்ஸ் லெஸ்டர் மற்றும் ஜோசப் ஸ்டீவர்ட் போன்றோர் கொள்கை வட்டம் ஆறு படிநிலைகளைக் கொண்டுள்ளது, அவை மீண்டும் மீண்டும் ஒரு சுழற்சிப் பாதையில் நகர்த்தப்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.




கொள்கை வட்டத்தின் முக்கிய படிநிலைகளை பின்வருமாறு விவரிக்கலாம்.

**நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்** என்பது பிரச்சனைப் பட்டியல் தொடர்பான அதிகாரிகளின் ஆரம்ப விவாதங்கள் அல்லது அவர்கள் வேலை செய்யும் பிரச்சினைகள் ஆகும். இந்த கட்டத்தில் அரசாங்கத்தின் தலையீடு தேவைப்படும் ஒரு பிரச்சனையை அடையாளம் கண்டு, அதை பொதுமக்களுக்கு ஒரு பிரச்சினையாக முன்மொழிகிறது.

**கொள்கை உருவாக்கம்** என்பது ஏற்கனவே உள்ள சிக்கலைத் தீர்க்க அல்லது எதிர்காலத்தில் பாதகமான சூழ்நிலையைத் தடுக்க சட்டங்களை உருவாக்குதல் ஆகும்.கொள்கை உருவாக்கப் படிநிலை என்பது நிகழ்ச்சி நிரல் தயாரிப்பில் வரையறுக்கப்பட்ட ஒரு சிக்கலை அடிப்படையாகக் கொண்ட நோக்கங்களை அமைப்பதும், அந்த நோக்கங்களை அடைவதற்கான மாற்று நடவடிக்கைகளைக் கருத்திற் கொள்வதும் ஆகும்.

**கொள்கை அமுலாக்கம்** என்பது ஒரு பரந்த செயன்முறையாகும், இதில் உருவாக்கப்பட்ட கொள்கை வெளியிடப்படுகின்றது. அமுலாக்க நடைமுறையில் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புகள் மூலம் செயல்முறையில் உள்ளடங்குவதாவது

- தெளிவான தீர்வு விபரங்கள். உதாரணமாக தீர்வு பற்றிய தெளிவான விளக்கம் மற்றும் அதை செயல்படுத்துவதில் எந்த நிறுவனங்கள் ஈடுபட வேண்டும் என்பதாகும் .
- தீர்வில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு தெளிவான வள ஒதுக்கீடு செய்தல்
- முடிவெடுக்கும் அதிகாரத்தின் தெளிவான பிரதிநிதித்துவம்.

**கொள்கை மதிப்பீடு** கொள்கையின் விளைவுகள் மீது கவனத்தை செலுத்துகின்றது. இது ஒரு கொள்கையின் சாத்தியமான விளைவுகளும் முடிவுகளும் எட்டப்பட்டதா இல்லையா என்பதையும் கருத்தில் கொள்கிறது. மதிப்பீட்டுச் செயல்முறையின் மதிப்பாய்வுகள் மற்றும் விளைவுகளின் அடிப்படையில் புதிய நிகழ்ச்சி நிரல் அமைத்தல், முடிவெடுத்தல் மற்றும் அமுல்படுத்துதல் ஆகியவற்றின் தேவை வலியுறுத்தப்படலாம்.

**கொள்கை மீளாய்வு** என்பது கொள்கை மதிப்பீட்டிற்குப் பிறகு கொள்கையை மாற்றுவதாகும். இது கொள்கையின் சில கூறுகளை மாற்றுவது அல்லது முழு கொள்கையில் கடுமையான திருத்தம் மேற்கொள்வது என்ற அடிப்படையில் இடம்பெறலாம்.

**கொள்கைகளைக் கைவிடுதல் அல்லது இடைநிறுத்தல்** என்பது காலாவதியான கொள்கைகள் அல்லது திருத்த முடியாத கொள்கைகளை கைவிடுவதாகும். பின்வரும் காரணங்களால் கொள்கை நிறுத்தம் ஏற்படலாம்.

- கொள்கை இனி பயனுள்ளதாக இருக்காது.
- நிகழ்ச்சி நிரலுக்கான தேவை இனி இல்லை.
- பட்ஜெட் தேவைகள் கொள்கை அல்லது திட்டத்தின் முடிவை கட்டாயப்படுத்துகின்றன.
- தாக்கம் அல்லது விளைவுகளில் கொள்கை திருப்திகரமாக இல்லை என்பதை ஒரு மதிப்பீட்டு ஆய்வு குறிப்பிடுகின்றது .
- அரசியல் சூழல் இனி ஒரு கொள்கையின் இலக்குகளை ஆதரிக்காது.
- சில கொள்கைகள் அல்லது திட்டங்கள் முற்றிலும் கருத்தியல் காரணங்களுக்காக நிறுத்தப்படுகின்றன.